Registered as a Newspaper    பக்கங்கள் 04    விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM    மக்கள் தினசரி    Peoples Daily

நாதம் 04    திருவள்ளுவர் ஆண்டு 2024    ஐப்பசி 11    (27-10-1993)    புதன்கிழமை    ஓசை 251

நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி
யாழ்ப்பாணம்

## குடும்ப பதிவு அட்டைகளை ஒப்படைக்கக் கோரிக்கை

இதுவரை காலமும் பொதுமக்களிடம் இருந்து கையேற்ற குடும்பப்பதிவு அட்டைகளையும், பொதுமக்களிடம் இதுவரையில் கையளிக்கப்படாது உள்ள குடும்பப்பதிவு அட்டைகளையும், 05-11-93ற்கு முன்னர் ஒப்படைக்கும்படி சகல கிராம அலுவலர்களும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். அத்துடன் குடும்பப்பதிவு அட்டையுடன் தொடர்புடைய சகல ஆவணங்களையும், குடும்ப அட்டை பகுதியினரின் கோட்ட அலுவலகங்களில் இத்தினத்திற்கு முன்னர் கையளிக்கும்படியும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. தீவகக் கோட்டத்தினை சேர்ந்த கிராம அலுவலர்கள், யாழ் மத்திய பஸ் நிலையத்திற்கு அண்மையில் உள்ள அலுவலர்ககான அனுமதி வழங்கும் செயலகத்தில் இயங்கும், தீவகக் கோட்ட குடும்பப் பதிவு அட்டைச் செயலகத்திலும். யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளைச் (4ஆம் பக்கம் பார்க்க)

# போர் முனைச் செய்திகளுக்கு பூரண தணிக்கைகொண்டுவருக!

## அரசிடம் ராணுவம் கோரிக்கை

(கொழும்பு)

**வடக்கு-கிழக்கில் இடம்பெற்றுவரும் இராணுவ நடவடிக்கைகள் குறித்தும், இராணுவத் தரப்பிற்கு ஏற்பட்டுவரும் இழப்புக் குறித்தும் அரசாங்கம் செய்தித் தணிக்கையை கடைப்பிடிக்கவேண்டும் என அரசிடம இராணுவத் தரப்பினர் கோரியுள்ளனர். "யாழ்தேவி" இராணுவ நடவடிக்கையின்போது இராணுவத்திற்கு ஏற்பட்ட பாரிய இழப்பை கொழும்புப் பத்திரிகைகள் வெளியிட்டதைத் தொடர்ந்தே முழுமையான தணிக்கை முறை அமுல்படுத்தப்படவேண்டும் என இராணுவத்தரப்பு கோரியுள்ளதாகத் தெரியவருகின்றது.**

யாழ்தேவி இராணுவ நடவடிக்கை குறித்த தகவல்களை தென்னிலங்கைப் பத்திரிகைகள் வெளியிட்டதை தொடர்ந்து வடக்கு கிழக்கு இராணுவ நடவடிக்கைகள் தொடர்பான செய்திகளுக்கு முழுமையான தணிக்கை செய்யுமாறு நிர்ப்பந்திக்கும்படி அரசிடம் கோரிக்கை விடப்பட்டுள்ளதாக சண்டே ரைம்ஸ் பத்திரிகை தெரிவித்துள்ளது.

செய்தி தருபவரை கொல்லாதீர்கள் என்ற தலைப்பில் இப்பத்திரிகையின் ஆசிரிய தலையங்கத்தில் மேற்படி தகவல் வெளியிடப்பட்டுள்ளது தமது பாதுகாப்புத் துறை செய்தியாளர் போர் குறித்து எழுதிய கட்டுரைக்காக அவருககு விடப்பட்ட கொலை மிரட்டலை கடுமையாக கண்டித்துள்ள ஆசிரிய தலையங்கம் இத்தகையதோர் பயங்கரவாதம் இடம்பெற்றால் அதுஓர் ஆபத்தான அறிகுறி எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் இலங்கையில் மனித உரிமை மீறல்கள் இப்போது சீரடைந்து விட்டதாக பிரதமர் ரணில் கூறிக்கொண்டிருக்கும் போது இங்கு (4ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் இளைஞன் ராணுவத்தால்சுட்டு கொலை

மட்டக்களப்பில் கோப்பாவெளி இராணுவ முகாமில் வைத்து பொதுமகன் ஒருவர் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டார். புல்லுமலையைச் சேர்ந்த நவரட்ணம் வெற்றிவேல் (22) என்பவரே இவ்வாறு சுட்டுக்கொல்லப்பட்டவராவார். கடந்த ஆறாம்திகதி இச்சம்பவம் நடைபெற்றது மற்றுமொருவர் படையினரால் கடுமையாக தாக்கப்பட்டார்.

இதே தினம் பிற்பகல் சுமைதாங்கி என்ற இடத்தில் வைத்து பொன்னம்பலம் சண்முகநாதன் என்பவரை பொலிசார் கைது செய்துள்ளனர்.

## 13ஆம் கிராமத்தில் மூன்று தமிழர் கைது

மட்டககளப்பு 13ஆம் கிராமத்தில் படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததுடன் மூன்று பொதுமககளையும் கைது செய்தனர். கடந்த 14 ஆம் திகதி பிற்பகல்2.30 மணியளவில் 13ஆம் கிராமத்தில் நெடியவெட்டை பகுதியை சுற்றிவளைத்த படையினர் சரமாரியாக துப்பாக்கிச்சூடு நடத்தியதுடன் ஐந்து பிள்ளைகளின் தந்தையான இ. தங்கராசா [40], திருமணமானவரான கி. ஜீவநாதன் [24], இரு பிள்ளைகளுக்கு தந்தையான இ. தம்பிராசா ஆகிய குடும்பஸ்தர்களையும் கைது செய்து முகாம்கொண்டு சென்றனர்.

அத்துடன் துவிச்சக்கர வண்டிகள், வீட்டுத் தளபாடங்கள் பெருமளவிலான பொதுமக்களின் சொத்துக்களையும் படையினர் தமது தேவைக்காக கொண்டு சென்றுள்ளனர்.

## யாழ்ப்பாணத்தில் ரொயிட்டர்

(வடமராட்சி)

ரொயிட்டர் நிறுவனம் மற்றும் அசோஸியட்டடைச் சேர்ந்த செய்தியாளர்கள் ஐவர் நேற்று வாதுவ கப்பல் மூலம் யாழ் வந்தனர்.

ரொயிட்டர் நிறுவனத்தைச் சேர்ந்த லொகுஹது ஆராய்ச்சிகே, அனுருத்த பிரியசாந்த, அர்சுக பராக்கிரம, வர்ண (4ஆம் பக்கம் பார்க்க)

## புலோப்பளை சமரின் பின் இராணுவம் பின்வாங்குவது பற்றி சிசிலே முதலில் பேசினார்

### சண்டே ரைம்ஸ் தகவல்

(கொழும்பு)

யாழ்தேவி இராணுவ நடவடிக்கையின் போது புலோப்பளை சமரையடுத்து அப்பகுதிக்கு வந்த இராணுவத் தளபதி சிசில் வைத்திய ரட்ண இராணுவ அணிகளை என்ன செய்வது பின்வாங்க செய்வதா அல்லது முன்னேறுவதா என அங்கு நின்ற கள அதிகாரிகளை கேட்டதாக சண்டே ரைம்ஸ் பத்திரிகை தகவல் வெளியிட்டுள்ளது.

இப் பத்திரிகையின் பாதுகாப்புத்துறை செய்தியாளர் எழுதிய கட்டுரை ஒன்றிலேயே அடுத்து அவருக்கு இராணுவத் தளபதியால் அண்மையில் கொலை மிரட்டல் விடுக்கப்பட்டதும் இராணுவ தளபதி சிசில் வைத்தியரட்ன மேற்படி பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் இராணுவ நடவடிக்கை குறித்து கொழும்பு பத்திரிகைகள் விமர்சிப்பதை கடுமையாக கண்டித்திருந்ததும் தெரிந்ததே.

மேற்படி மிரட்டலுக்குள்ளான செய்தியாளர் இம்முறை சண்டே ரைம்ஸ் பதிப்பில் ''கிளாலி- அதன் உட் (4ஆம் பக்கம் பார்க்க)

## சிங்கள அதிகாரிகள் மீது யாழ். அரச அதிபர் சாடல்

[லண்டன்]

குடாநாட்டு மக்களின் பிரச்சினைகள் குறித்து அரசுடன் பல சந்தர்ப்பங்களில் பேசியிருக்கின்றேன். நான் நிலைமையை சொல்லும்போது அனுதாபமாக கேட்கின்றனர். சில வேளைகளில் நேர்மாறாகவும் அவர்கள் நடப்பதாக எனக்கு தெரிகிறது இவ்வாறு யாழ். அரச அதிபர்ளின் தொகையை கூடுதலாகக் காட்டி ஏராளமான உணவு மற்றும் மண்ணெண்ணெய் என்பவற்றை நீங்கள் யாழ்ப்பாணத்திற்கு வரவழைக்கின்றீர்கள். கடந்த சில ஆண்டுகளாக அரசுக்கு நட்டத்தை (4 ஆம் பக்கம் பார்க்க)

## ராணுவம், தேசவிரோதிகள் கூட்டாகச் சுற்றிவளைப்பு

## ஐ. தே. க வில் சேர்ந்துகொள்ள அநுரா பண்டாரநாயக்கா விருப்பம்

புலோப்பளை சமரின் பின்

அர்சுக பராக்கிரம, வர்ண

(4ஆம் பக்கம் பார்க்க)

# இராணுவம் பின்வாங்குவது பற்றி சிசிலே முதலில் பேசினார்

## சண்டே ரைம்ஸ் தகவல்

(கொழும்பு)

யாழ்தேவி இராணுவ நடவடிக்கையின் போது புலோப்பளை சமரையடுத்து அப்பகுதிக்கு வந்த இராணுவத் தளபதி சிசில் வைத்திய ரட்ண இராணுவ அணிகளை என்ன செய்வது பின்வாங்க செய்வதா அல்லது முன்னேறுவதா என அங்கு நின்ற கள அதிகாரிகளை கேட்டதாக சண்டே ரைம்ஸ் பத்திரிகை தகவல் வெளியிட்டுள்ளது.

இப் பத்திரிகையின் பாதுகாப்புத்துறை செய்தியாளர் எழுதிய கட்டுரை ஒன்றிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. கள அதிகாரிகள் தாம் தொடர்ந்து முன்னே செல்லப்போவதாக கூறிய போது அதை இராணுவத் தளபதி ஏற்றுக் கொண்டதாகவும் அப் பதத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

யாழ்தேவி இராணுவ நடவடிக்கை குறித்து இச் செய்தியாளர் எழுதிய கட்டுரையை அடுத்து அவருக்கு இராணுவத் தளபதியால் அண்மையில் கொலை மிரட்டல் விடுக்கப்பட்டதும் இராணுவ தளபதி சிசில் வைத்தியரட்ன மேற்படி பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் இராணுவ நடவடிக்கை குறித்து கொழும்பு பத்திரிகைகள் விமர்சிப்பதை கடுமையாக கண்டித்திருந்ததும் தெரிந்ததே.

மேற்படி மிரட்டலுக்குள்ளான செய்தியாளர் இம்முறை சண்டே ரைம்ஸ் பதிப்பில் ''கிளாலி- அதன் உட்

(4ஆம் பக்கம் பார்க்க)

## ராணுவம், தேசவிரோதிகள் கூட்டாகச் சுற்றிவளைப்பு

### ஆறு பொதுமக்கள் கைது

(மட்டக்களப்பு)

கடந்த திங்களன்று மட்டக்களப்பில் இராணுவத்தினரும் தேசவிரோதக்குழுவினரும் மேற்கொண்ட தேடுதல் சுற்றிவளைப்புகளில் ஆறு பொதுமக்கள் கைது செய்யப்பட்டனர்.

அன்று அதிகாலை 5. 00 மணியளவில் கொக்கட்டிச்சோலை இராணுவத்தினரும் ரெலோகுழுவினரும் இணைந்து முனைக்காடு கிராமத்தை சுற்றி வளைத்து பாலிப்போடி நேசன் (24) முனைக்காடு, மாணிக்கப்போடி கீதா (27) கன்னன்குடா ஆகிய இரு பொதுமக்களை கைது செய்

(4ஆம் பக்கம் பார்க்க)

பல்கலைக் கழகத்திற்கான

# அனுமதி முறைக்கு எதிராக நாளை ஆர்ப்பாட்ட பேரணி!

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா அரசினால் வெளியிடப்பட்ட பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப் புள்ளித் திட்டத்தைக் கண்டித்து நாளை யாழ். நகரில் மாபெரும் கண்டனப் பேரணி ஒன்று நடைபெறவுள்ளது.

நாளை காலை 9-00 மணியளவில் யாழ். பல்கலைக்கழக முன்றலில் இருந்து ஆரம்பமாகவுள்ள இக் கண்டனப் பேரணி தொடர்பான சகல முன்னேற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவ் வெட்டுப்புள்ளித் திட்டத்தினால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கான ஒருங்கிணைப்புக் குழுவின் முக்கிய ஆலோசனைக் கூட்டம் ஒன்று இன்று யாழ் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

வெட்டுப்புள்ளித் திட்டத்தினால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் கல்விமான்கள், பல்கலைக்கழக மாணவர்கள், ஆசிரியர்கள், பொது மக்கள் போன்ற அனைத்து தரப்பினரும் இக் கண்டனப் பேரணியில் பெருமளவில் திரளுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (05)

வெட்டுப்புள்ளியை கண்டித்து

## கிளிநொச்சி மாணவர் மகஜர் கையளிப்பு

(கிளிநொச்சி)

1992கல்வியாண்டின் பல்கலைக்கழக அனுமதி வெட்டுப்புள்ளி முறையை கண்டித்து நேற்று கிளிநொச்சியில் மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலமும் கண்டனப் பொதுக் கூட்டமும் இடம்பெற்றது. கிளிநொச்சி விவசாயபீட மாணவர்களும், பாடசாலை மாணவர்களும் பெற்றோர் மற்றும் ஆசிரியர்கள் இதில் கலந்து கொண்டனர்.

பேரணி பிற்பகல் 1.45மணிக்கு கிளிநொச்சி கந்தசுவாமி கோவில் முன்றலில் இருந்து ஆரம்பித்தது. பேரணி 3மணிக்கு கிளிநொச்சி கல்வி அதிகாரி பணிமனையை அடைந்

(4ஆம் பக்சம் பார்க்க)

**தங்கையே!**

வீரத்தில்...
ஆணுக்கும் பெண்ணுக்கும்
அளவு கோலில் மாற்றமில்லை
நீ நிமிர்ந்தால்
நிலம் உனது காலடியில்

தொடர்பு கொண்டிருந்ததாகத் தெரியவருகின்றது.

யாழ்தேவி இராணுவ நடவடிக்கை குறித்த தகவல்களை தென்னிலங்கைப் பத்திரிகைகள் வெளியிட்டதை தொடர்ந்து வடக்கு கிழக்கு இராணுவ நடவடிக்கைகள் தொடர்பான செய்திகளுக்கு முழுமையான தணிக்கை செய்யுமாறு நிர்ப்பந்திக்கும்படி அரசிடம் கோரிக்கை விடப்பட்டுள்ளதாக சண்டே ரைம்ஸ் பத்திரிகை தெரிவித்துள்ளது.

செய்தி தருபவரை கொல்லாதீர்கள் என்ற தலைப்பில் இப் பத்திரிகையின் ஆசிரிய தலையங்கத்தில் மேற்படி தகவல் வெளியிடப்பட்டுள்ளது தமது பாதுகாப்புத் துறை செய்தியாளர் போர் குறித்து எழுதிய கட்டுரைக்காக அவருக்கு விடப்பட்ட கொலை மிரட்டலை கடுமையாக கண்டித்துள்ள ஆசிரிய தலையங்கம் இத்தகையதோர் பயங்கரவாதம் இடம்பெற்றால் அதுஓர் ஆபத்தான அறிகுறி எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் இலங்கையில் மனித உரிமை மீறல்கள் இப்போது சீரடைந்து விட்டதாக பிரதமர் ரணில் கூறிக் கொண்டிருக்கும் போது இங்கு

(4ஆம் பக்கம் பார்க்க)

# சிங்கள அதிகாரிகள் மீது யாழ். அரச அதிபர் சாடல்

[லண்டன்]

குடாநாட்டு மக்களின் பிரச்சினைகள் குறித்து அரசுடன் பல சந்தர்ப்பங்களில் பேசியிருக்கின்றேன். நான் நிலைமையை சொல்லும்போது அனுதாபமாக கேட்கின்றனர். சில வேளைகளில் நேர்மாறாகவும் அவர்கள் நடப்பதாக எனக்கு தெரிகிறது இவ்வாறு யாழ். அரச அதிபர் மாணிக்கவாசகர் பி.பி.ஸிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

இப் பேட்டியின் விபரம் வருமாறு;

கேள்வி: குடா நாட்டு மக்களின் தொகையை கூடுதலாகக் காட்டி ஏராளமான உணவு மற்றும் மண்ணெண்ணெய் என்பவற்றை நீங்கள் யாழ்ப்பாணத்திற்கு வரவழைக்கின்றீர்கள். கடந்த சில ஆண்டுகளாக அரசுக்கு நட்டத்தை

(4 ஆம் பக்கம் பார்க்க)

# ஐ. தே. க வில் சேர்ந்துகொள்ள அநுரா பண்டாரநாயக்கா விருப்பம்

## -கூரேயின் வேண்டுகோளை ஏற்றார்

ஆளும் ஐக்கியதேசியக் கட்சியில் சேர்ந்து கொள்ள அநுரா பண்டாரநாயக்கா இணங்கியுள்ளார். ஆளும் கட்சியில் சேர்ந்து கொள்ளுமாறுஐ தே. க பொதுச்செயலர் சிறிசேனா கூரே விடுத்த வேண்டுகோளை ஏற்று தாம் ஐ. தே கட்சியில் சேர்வதாக அநுரா பண்டாரநாயக்கா தெரிவித்தார்.

அநுரா பண்டாரநாயக்கா லண்டனிலிருந்து 24ஆம் திகதியிட்டு சிறிசேனா கூரேக்கு எழுதியுள்ள கடிதத்தில்ஐ தே. க சேர்ந்து கொள்ளுமாறு ஜனாதிபதி விஜேதுங்க சார்பில் அமைச்சர் கூரே தமக்கு விடுத்த அழைப்பை ஏற்றுக் கொள்வது என தாம் தீர்மானித்திருப்பதாக கூறியுள்ளார். ஐ தே க உருவாக்கலில் தமது தந்தையும் உதவியிருப்பதை அநுராபண்டாரநாயக்கா கடிதத்தில் நினைவுபடுத்தியுள்ளார்.

அண்மையில் சுதந்திரக்கட்சி

( 4 ஆம் பக்கம் பகர்க்க)

## யாழ். வைத்தியசாலைக்கு மருந்து வந்து சேரவில்லை

யாழ் போதனாவைத்தியசாலைக்கான இவ் வருடத்திற்குரிய இறுதி கால ஆண்டிற்கான மருந்து வகைகள் இன்னும் யாழ் போதனா வைத்தியசாலைக்கு வந்து சேரவில்லை என யாழ்போதனா வைத்தியசாலை வட்டாரங்கள் கவலை தெரிவித்தன.

தற்சமயம் நிலவிவருகின்ற மாரிகால சூழ் நிலையை அடுத்து கப்பல் சேவைகளும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே நடைபெறவுள்ளதாகவும் இதனால் மேற்படி அனுமதிக்கப்பட்ட மருந்துப் பொருள்கள் வருவது மேலும் தாமதமாகுவதாக அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

இதனால் யாழ் போதனா வைத்தியசாலைக்கு மருந்துத் தட்டுப்பாடு ஏற்படக் கூடிய சாத்தியக்கூறு உள்ளதாக வைத்தியசாலைஉயர் அதிகாரி ஒருவர்கவலை தெரிவித்தார்.

## ஆளும்கட்சியில் சேர்ந்த அநுராவிற்கு மந்திரி பதவி?

(கொழும்பு)

ஆளும் ஐ தே கவில் இணைவதற்கு சமமதித்துள்ள அநுரா பண்டாரநாயக்காவிற்கு அமைச்சர் பதவி வழங்கப்படலாம் என செய்திகள் தெரிவிக்கின்றன.

நிதி அல்லது வெளியுறவு அமைச்சர் பதவி அநுராவிற்கு வழங்க ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா இணங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## யுனிசெவ் பிரதிநிதிகள் யாழ். வருகை

(நமது நிருபர்)

யுனிசெவ் நிறுவன பிரதிநிதிகள் நால்வர் எதிர்வரும் இரண்டாம் திகதி யாழ்ப்பாணம் வரவுள்ளனர். நரோமா கப்பல் மூலம் இங்குவரவுள்ள இவர்கள் யாழ்மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியம், யாழ்மாநகரசபை ஆணையாளர்சுகாதாரசேவைகள் பிராந்திய பணிப்பாளர் ஆகியோரைச்சந்தித்து இங்குள்ள சுற்றாடல் சுகாதாரம் பற்றி கலந்துரையாடவுள்ளனர்

மேலும் யாழ் போதனா வைத்தியசாலைமற்றும் அகதி முகாம்கள் ஆகியவற்றையும் நேரில் சென்று பார்வையிட்டு அங்குள்ள சுகாதார சீர்கேடுகள் குறித்து அறியவுள்ளனர் இந் நான்கு பிரதிநிதிகளும் மறுநாள் மீண்டும் கொழும்பு திரும்பவுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது. [ச] )சி]

# கிழக்கில் மீள குடியமர்த்தல்; திறைசேரி நிதி இல்லையாம்

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் மீளக் குடியமர்த்தும் திட்டத்திற்கு நிதி அமைச்சின் செயலாளர் ஆர் பாஸ்கரலிங்கம் எதிர்ப்புத் தெரிவித்துள்ளதோடு நிதி ஒதுக்கீடு செய்யவும் மறுத்துள்ளதாக கொழும்பு சிங்களப்ருபத்திரிகைஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் நடைபெற்ற இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இடம்பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த்துவதற்கு ஜனாதிபதியும் இராணுவ உயர் அதிகாரிகளும் முயற்சி எடுத்து வருகின்றனர்.

இம் முயற்சிக்கு நிதி அமைச்சின் செயலாளர் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார். இக் குடியமர்த்தும் திட்டத்துக்குத் தேவையான சுமார் 45கோடி ரூபாவைப் பெற்றுக் கொள்வதற்கு புனர்வாழ்வு அமைச்சு பாராளுமன்றத்தின் அனுமதியை ஏற்கனவே பெற்றுக் கொண்டு விட்டது எனினும் இத் திட்டத்திற்கு மேற்படி தொகை பணத்தை வழங்குவதற்கு திறைசேரி மறுப்புத் தெரிவித்துள்ளது

தற்பொழுது இராணுவ நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்த மக்களுக்கு நிவாரண உணவுப் பொருள்கள் வழங்குவதற்கு மட்டும் மாதாந்தம் சுமார் 20 கோடி ரூபா தேவைப்படுவதாகவும். அத்துடன் மீளக் குடியமர்த்தப்படும் குடும்பம் ஒவ்வொன்றுக்கும் சுமார் 21,500 ரூபா வழங்கவேண்டியிருக்கும் அத்துடன் தொடர்ந்து 6 மாதங்களுக்கு நிவாரண உணவுகளும் வழங்கப்படவேண்டும் இவ்வாறான புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்கும் நிதி மறுக்கப்பட்டுள்ளது.

## வரி விளம்பரம்

### விஞ்ஞானம் வினா விடை

ஆண்டு — 6, 7, 8 ஆக்கம் Y. இராஜஇரத்தினம் M. Sc. விற்பனை ஆகிறது பூபால சிங்கம் புத்தகசாலை.

(சி-7734)

### புலமைப் பரிசில் பயிற்சி

வெளிவந்து விட்டது! ஆவலோடு எதிர்பார்த்த புலமைப் பயிற்சி நூல் 21 நவீன கட்டுரைகளையும் 10 மாதிரி வினாத்தாள்களையும் [விடையுடன்] தமிழ், கணிதப்புதிர் களையும்கொண்டது. தொகையாக எடுப்பவர்களுக்குவிஷேட கழிவு உண்டு. புதிய கல்வி நிலையம் 219, நாவலர்வீதி, யாழ்ப்பாணம் [6384]

### நல்லின பலாக் கன்று இலவசம்

5ஜாம் போத்தல்களை எமது நிறுவனத்தில் ஒப்படைத்து அதற்குரிய பணம் ரூபா 25/- பெற்றுக் கொள்வதுடன் நல்லின பலாக்கன்றை இலவசமாக எடுத்துச் செல்லுங்கள். ரேஸ்ட்லைன் இன்டஸ்ரீஸ், (தனி) லிமிட்டட்.

[சி/7782]

### விற்பனைக்குண்டு

வேப்பம்பலகை விற்பனைக்குண்டு தொடர்பு; 16, றக்கா ஒழுங்கை, சுண்டிக்குளி.

(6396)

### லொறி தடுத்து வைப்பு

யாழ்ப்பாணம் புத்தூர்கிழக்கைச் சேர்ந்த லொறி ஒன்று வவுனியாவில் இராணுவத்தினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளது. 41-5668, என்ற இலக்கங்களையுடைய லொறியே தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

லொறியின்சாரதியும், நடத்துனரும் கைது செய்யப்பட்டுள்ளனர். நடத்துனர் ஒரு சிங்களவர் என்பது குறிப்பிடத்தக்கது.

### கலந்துரையாடல்

விளையாட்டு கழகங்களை மீளமைப்பு செய்தல் மற்றும் பதிவுசெய்தல் என்பனதொடர்பான விடயங்கள் பற்றி முக்கிய கலந்துரையாடல் ஒன்று இன்று காலை பத்து மணியளவில் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் கா. சந்திரராஜா தலைமையில் பிரதேசசெயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. சம்பந்தப்பட்ட அனைவரும் தவறாது சமுகமளிக்கும் படி வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர் பயிற்சிக்கல்லூரி

## தமிழ் விசேட பயிற்சிநெறி ஆரம்பிக்க அனுமதி

1994ஆம் ஆண்டிற்கான ஆசிரிய பயிற்சிக்காக தமிழ் விசேடபயிற்சி நெறியும் ஆரம்பிப்பதற்கான அனுமதியை கல்வி அமைச்சு வழங்கியுள்ளதாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் த. மகாசிவம் தெரிவித்துள்ளார்.

இப்பயிற்சி நெறிக்கான முடிவு திகதி 1993-11-08-ம் திகதியாகும். வர்த்தமானி உரிய நேரத்தில் கிடைக்காதபடியினால் விண்ணப்பிக்க முடியாத ஆசிரியர்கள் சங்கப் பணி மனையுடன் தொடர்பு கொண்டு விண்ணப்பத்தைப் பெற்று ஆசிரிய கலாசாலைப் பணிப்பாளருக்கு பதிவுத்தபாலில் விண்ணப்பிப்பதோடு விண்ணப்பத்தின் ஒருபிரதியை தமிழ் பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபருக்கும் உடற் கல்விநெறியை விரும்புவோர் பலாலி ஆசிரியர் கலாசாலை அதிபருக்கும் தாமதிக்காது விண்ணப்பிக்குமாறு கோரப்படுகின்றனர்.

## சூழல் பாதுகாப்பு சபை நிறுவுவதற்கு தீர்மானம்

காடு வளர்ப்பை ஒருங்கிணைந்து செயற்படுத்துவதற்கென சூழல் பாதுகாப்பு சபை ஒன்றை நிறுவுவதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க நிறுவனங்களாகிய கமநல சேவைத் திணைக்களம், உள்ளூராட்சித் திணைக்களம் வன இலாகா, மாநகரசபை, அரசாங்க செயலகப் பிரதிநிதிகள், அரசாங்க சார்பற்றநிறுவனங்களாகிய அகதிகள் புனர்வாழ்வுக்கழகம், தமிழர்புனர்வாழ்வுக்கழகம் இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், மில்க்வைற் நிறுவனப் பிரதிநிதிகள், மற்றும் யாழ் மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளர், கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர், யாழ் மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன மாவட்ட கோட்ட இணைப்பாளர்களும் கலந்து கொண்ட கூட்டத்தில் இம் முடிவுஎடுக்கப்பட்டுள்ளது காடுவளர்ப்பை ஒருங்கிணைந்து செயற்படுத்துவதெனவும் அதற்கேதுவாக யாழ் மாவட்டத்தில் ஏற்படுத்தப்படும் மரநடுகைகள்அனைத்தையும் பொருண்மியமேம்பாட்டு நிறுவனத்தினூடாக மேற்கொள்வதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

### டவுனிங் வீதி ஆண்டுகள் புத்தகம் வெளிவந்தது

''டவுனிங் வீதி ஆண்டுகள்'' என்ற தலைப்பில் முன்னாள் பிரிட்டன் பிரதமர் திருமதி மார்க்கிரட் தட்சர் நூல் ஒன்றை எழுதியுள்ளார். 900 பக்கங்களைக் கொண்ட இந்த நூல் 2,50000 பிரதிகள்வெளியிடப் பட்டிருப்பதாகவும் உலகெங்கும் தற்போது பரபரப்பாக விற்பனையாகுவதாகவும் கூறப்படுகிறது. பதினெட்டு மாத காலம் எடுத்து எழுதப்பட்ட இந் நூலில் 11 ஆண்டுகள் பிரதமராகப் பதவிவகித்த தனது நினைவுகளை அவர் பதிவு செய்துள்ளார்.

## மாவீரர் உருவப்படங்கள் மேலும் வெளிவந்துள்ளன

ஆ.க.வெ. நடவடிக்கையின் போது தற்கொடையாளர்களான பின்வரும் மாவீரர்களின் உருவப்படங்கள் அண்மையில் வெளிவந்துள்ளன

01. வீ.வே. தர்மிலா கௌரி கனகு உரும்பராய்,
02. ,, புஸ்பன் பிரகாசம் நோயல்தோமஸ் நெடுந்தீவு.
03. ,, சுதன் இராசரத்தினம் ஜீவகுமார் வவுனியா
04. ,, ஜஸ்மின் செல்வமலர் கோபாலப்பிள்ளை திருமலை
05. 2-ம் லெப். செல்லக்குட்டி வீரகத்தி ரவிச்சந்திரன் கரவெட்டி
06. ,, தாஸ் செல்லையா குகேந்திரன் கிளிநொச்சி
07. வீ.வே. குரு மாரிமுத்து தயாநிதி ,,
08. லெப். மிராண்டா வீரபுத்திரன் சுரேந்திரன் திருமலை
09. வீ.வே யசோதரன் வேலுப்பிள்ளை செல்வராசா வவுனியா
10. 2-ம் லெப். நிசாந்தி லெட்சுமி வைத்திலிங்கம் வல்வெட்டித்துறை
11. லெப். அசோக் வைத்திலிங்கம் கணேஸ்குமார் மாங்குளம்
12. கப்டன் சிவம்/பவான் திருப்பரங்கிரிநாதன் நெல்லைநாதன் உடுப்பிட்டி
13 வீ.வே. செபமாலை அலெக்சாண்டர் றூபன் குரூஸ் மெக்கி மன்னார்
14. ,, சதீஸ் தம்பையா யோகநாதன் வரணி
15. ,, அஜந்தன் அல்போன்ஸ் சேகர் மானிப்பாய்
16. ,, விமல் கதிர்காமப்போடி குகதாஸ் மட்டக்களப்பு
17. 2 ம் லெப். இளவரசி சந்திரபவானி சிவப்பிரகாசம் மணலாறு
18. லெப். கர்ணன் தம்பிராசா பவனேஸ்வரன் கிளிநொச்சி
19. வீ.வே. சுனித்தா குஸ்மாவதி கருணாகரன் திருமலை
20. 2 ம் லெப். மௌலி தாமோதரம்பிள்ளை மாணிக்கவாசகம் கொக்குவில்
21. 2 ம் லெப் விக்கி விக்கினேஸ்வரி சதாசிவம் வவுனியா
22 வீ.வே. வவிதரன் நிற்சிங்கம் வல்லிபுரநாதன் மீசாலை வடக்கு
23. ,, மருது இராமசாமி மருதலிங்கம் முல்லைத்தீவு
24. ,, மதிவாணன் தர்மலிங்கம் தனேஸ்வரன் சங்கானை
25 ,, குரு பரராசசிங்கம் விமலேஸ்வரன் யாழ்
26. லெப். வாசு பொன்னுத்துரை இந்திரகாசன் வண்ணார்பண்ணை
27. கப்டன் ஸ்ராலின் செல்வராசா தியாகராசா மட்டக்களப்பு
28. லெப். யாதவன் கந்தையா கமலக்கண்ணன் பாண்டியன்தாழ்வு
29 2-ம் லெப். கஸ்ரோ நடேசபிள்ளை சுபாகரன் பரந்தன்
30. வீ.வே. கில்பேட் ஞானராசா ஞானதீபன் மன்னார்
31. ,, பார்த்தீபன் டெமினிக் கனியூட் ,,
32. ,, புஸ்பன் நாகராசா குலேந்திரன் கைதடி
33. ,, சுசோக்/கிசோக் தியாகராசா கிருபாகரன் மானிப்பாய்
34. 2-ம் லெப் மஞ்சுதன் சிவமாலை குகனேசன் வவுனியா
35. லெப். தாஸ் தேவலிங்கம் அன்ரனி தாசன் மயிலிட்டி
36. லெப். உமாசங்கர்/ரவி சின்னமணி கென்சியஸ் குருநகர்
37. லெப். மைக்கல் ஆழ்வான் விநாயகமூர்த்தி நெல்லியடி
38. வீ வே. சங்கீதா சூரியகுமாரி சுப்பிரமணியம் வவுனியா
39. ,, உதயன் முருகேசு குமாரசாமி மட்டக்களப்பு
40. ,, முரளி மகாலிங்கம் தவக்குமார் நெடுந்தீவு
41. ,, யுகந்தன் நடராசா பத்மநாதன் மணலாறு
42. 2 ம் லெப் சுந்தரி சுஜிதா தேவநாயகம் திருமலை
43 2 ம் லெப். அருண் கோவிந்தசாமி அருளானந்தம் மாதகல்

1991ஆம் ஆண்டு ஆ.க.வெ. நடவடிக்கையின்போது ஆனையிறவுப் பிரதேசத்தில் தம்மைத் தற்கொடையாளர்களாக்கிக் கொண்ட மாவீரர் உருவப் படங்களை சிறு அன்பளிப்பு செலுத்துவதன் மூலமாக தமிழீழ மாவீரர் பணிமனை, கொக்குவிலில் பெற்றுக் கொள்ளலாம் என்று தமிழீழ மாவீரர் பணிமனை அறிவித்துள்ளது

## கண்ணீர் அஞ்சலி

மானிப்பாய் விவேகானந்த வித்தியாசாலையின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் முழுமையாகத் தன்னையே அர்ப்பணித்து அண்மையில் ஓய்வு பெற்ற திரு. பொ. இரா. நடராஜன் அவர்கள் 3-10-93-ல் சிலாபத்தில் காலமானார். அவர் பிரிவால் துயருற்றுக் கண்ணீர் சிந்தும் அவர்தம் குடும்பத்தாருக்கும் உறவினருக்கும் எமது அனுதாபங்களைத் தெரிவித்து அமரரான அதிபருக்கு எமது கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்.

விவேகானந்த வித்தியாசாலை, மானிப்பாய்.

அதிபர், ஆசிரியர், மாணவர்கள்.

(6395)

## 31ஆம் நாள் நெஞ்சின் பாசஅலைகள்

அன்னை மடியில் 11-01-1988

கங்கை மடியில் 27-09-1993



செல்வன்

### ஜனகன் ஸ்ரீசந்திரன் (ஜனாக்குட்டி)

வண்ணமலர்ச் சோலையில் வட்டமிட்டுப் பறந்த வளர்நிதியே!
முடிசூடி ஆளவந்த மூத்தவனே முதல் முத்தே!
குலவிளக்கு அணைந்ததென அம்மம்மா கதறியழ
கேட்டதெல்லாம் ஊட்டி வைத்த தாத்தா உருகியழ
ஆசைமகன் மாண்டான் என அம்மா புலம்பி அழ
ஆசைக் கனவுகள் அழிந்து போனதென அப்பா நினைந்துருகியழ
எண்ணெய் வைத்து தலைவாரிவிட்ட அன்ரி குளறியழ
மடியிருத்திப் பேன்பார்த்துன் மழலை மொழி கேட்டு
வடிவுபார்த்த சித்திமார் வாய்விட்டுக் குளறியழ
மணிமகுடம் சூடியாண்ட மருமகன் மடிந்தானென
அணிகள் மகிழ்ந்தளித்த மாமன்மார் மயங்கியழ
அரவணைக்கும் பேரன் அருகில் இல்லையென
அப்பம்மா, அப்பப்பா அழுதழுது மாள
எல்லோரையும் ஏங்கித் துடிக்கவிட்டு

எங்கு சென்றாய் எம் அன்புச்செல்வமே! - நீயிருந்த வீடு, குடியிருந்த கோயில் கொலுவிழந்துகாணப்படுகின்றதே, மீண்டும் வந்துன் அம்மா வயிற்றில் பிறப்பாயோ அன்பு ஜனாக்குட்டி?

எம் அன்புச் செல்வனின் ஆத்ம சாந்திக்காக நடாத்தப்படும் வைபவத்தில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- குடும்பத்தவர்கள்

அம்மம்மா, தாத்தா, அப்பா, அம்மா, அன்ரி, சித்தி, மாமாமார், அம்மாச்சி, அப்பப்பா, அப்பம்மா, உற்றார்,

நாவலடி, ஊரிக்காடு. (6393)

## தேவை

எமது சங்கத்திற்கு புதிதாக புடவை நிலையம் அமைப்பதற்குரிய தளபாடங்கள் தேவைப்படுகிறது. கண்ணாடி அலுமாரி, றாக்கைகள் போன்றவை பாவித்த நல்ல நிலையிலுள்ளவை விற்பனைக்கிருந்தால் எம்முடன் தொடர்பு கொள்ளவும்

வடமராட்சி கிழக்கு ப. நோ. கூ. சங்கம்

மருதங்கேணி, தாளையடி.

(சி/7788)

தரமான மாட்டிறைச்சி வற்றல் கிடைக்கவில்லை

தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

லொறியின் சாரதியும், நடத்துனரும் கைது செய்யப்பட்டுள்ளனர். நடத்துனர் ஒரு சிங்களவர் என்பது குறிப்பிடத்தக்கது.

### கலந்துரையாடல்

விளையாட்டு கழகங்களை மீளமைப்பு செய்தல் மற்றும் பதிவுசெய்தல் என்பனதொடர்பான விடயங்கள் பற்றி முக்கிய கலந்துரையாடல் ஒன்று இன்று காலை பத்து மணியளவில் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் கா. சந்திரராஜா தலைமையில் பிரதேசசெயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. சம்பந்தப்பட்ட அனைவரும் தவறாது சமுகமளிக்கும்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

## தேவை

எமது சங்கத்திற்கு புதிதாக புடவை நிலையம் அமைப்பதற்குரிய தளபாடங்கள் தேவைப்படுகிறது. கண்ணாடி அலுமாரி, றாக்கைகள் போன்றவை பாவித்த நல்ல நிலையிலுள்ளவை விற்பனைக்கிருந்தால் எம்முடன் தொடர்பு கொள்ளவும்

வடமராட்சி கிழக்கு ப நோ. கூ. சங்கம்

மருதங்கேணி,
தாளையடி. (சி|7788)

## தரமான மாட்டிறைச்சி வற்றல் கிடைக்கவில்லை என்று கவலையா?

## ★ கவலையை விடுங்கள்

**வற்றாத வளம் சூழ்ந்த வன்னியிலே இருந்து வந்திருக்கும் தரமான மாட்டிறைச்சி வற்றலை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.**

மலிவான விலையினிலே சுவையான இறைச்சி வற்றல்

**தரமான மாட்டிறைச்சி வற்றல்**
**கிலோ 160/- மட்டுமே**

நீங்கள் தவறாது நாடவேண்டிய இடம் :-

## "உதயம் பல்பொருள் அங்காடி"

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.
(சி-7886)

## இன்றுமுதல் குதூகல ஆரம்பம்!

## "அழகுநிலா"

**(புகைப்படபிடிப்பாளர்கள்)**

1993ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 11ஆம் திகதி புதன்கிழமை காலை 10.02 - 11.38 க்கு வரும் சுபமுகூர்த்தவேளையில் குதூகல திறப்பு விழா

வாழ்க்கையில் ஒருதரம் வரும் வைபவங்களை வாழ்நாள் பூராவும் பார்த்து மகிழ

எங்கள் சேவை உங்களுக்குத் தேவை

**குறைந்த செலவு! நிறைந்த சேவை!!**

**உருவில் வீதி, மானிப்பாய்.**

(6391)

மானிப்பாய்

34. 2-ம் லெப் மஞ்சுதன் சிவமாலை குகனேசன்
வவுனியா

35. லெப். தாஸ் தேவலிங்கம் அன்ரனி தாசன்
மயிலிட்டி

36. லெப். உமாசங்கர்/ரவி சின்னமணி கென்சியஸ்
குருநகர்

37. லெப். மைக்கல் ஆழ்வான் விநாயகமூர்த்தி
நெல்லியடி

38. வீ வே. சங்கீதா சூரியகுமாரி சுப்பிரமணியம்
வவுனியா

39. ,, உதயன் முருகேசு குமாரசாமி மட்டக்களப்பு
40. ,, முரளி மகாலிங்கம் தவக்குமார் நெடுந்தீவு
41. ,, யுகந்தன் நடராசா பத்மநாதன் மணலாறு
42. 2-ம் லெப் சுந்தரி சுஜிதா தேவநாயகம் திருமலை
43 2-ம் லெப். அருண் கோவிந்தசாமி அருளானந்தம்
மாதகல்

1991ஆம் ஆண்டு ஆ. க. வெ. நடவடிக்கையின்போது ஆனையிறவுப் பிரதேசத்தில் தம்மைத் தற்கொடையாளர்களாக்கிக் கொண்ட மாவீரர் உருவப் படங்களை சிறு அன்பளிப்பு செலுத்துவதன் மூலமாக தமிழீழ மாவீரர் பணிமனை, கொக்குவிலில் பெற்றுக் கொள்ளலாம் என்று தமிழீழ மாவீரர் பணிமனை அறிவித்துள்ளது.

## தொண்டர் ஆசிரியர் சங்க

## பொதுக் கூட்டம்

மேற்படி சங்கத்தின் பொதுக்கூட்டம் எதிர்வரும் 30-10-93 (சனிக்கிழமை) காலை 11 00 மணிக்கு யாழ். பட்டப்படிப்புக் கல்லூரியில் நடைபெறும் இதில் பயிலுனர் நியமனம் கிடைத்த ஆசிரியர்களும் நியமனம் கிடைக்காத தொண்டர் ஆசிரியர்களும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தலைவர்
(6385) செ. பரமேஸ்வரன்

## விக்னா கல்வி நிறுவனம்

**52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.**

(O/L வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

**ஆண்டு -10 (O/L - 94)**
**ஆண்டு -9 (O/L - 95)**

**இறுதித் தவணைப் பரீட்சைக்கான**
**மீட்டல் வினா-விடை வகுப்புகள்**

*திறமையால் பிரபல்யமான திறமைமிக்க யாழ் முன்னணி ஆசிரியர் குழு:*

| | |
|---|---|
| விஞ்ஞானம்: | திரு. J. R. சூரி |
| கணிதம்: | திரு. ஜெகன் |
| சமூகக்கல்வி; | திரு. கோபி |
| ஆங்கிலம்: | திரு. விஸ்வநாதன் |
| தமிழ்: | திரு. சிவா, திருப்பதி |
| வர்த்தகம்; | திரு. கருணாகரன் |
| சமயம் | திரு. சங்கர், கெங்கா |

ஆம்ரபம்

28-10-1993 [வியாழன்] மாலை 3மணி

**O/L 93 க்குரிய**
**PAPER CLASS**

மொத்தம் 9 பிரிவுகளில் நடைபெறுகின்றது
புதிய அனுமதிகள் இல்லை (சி-7785)

ஆசைக் கனவுகள் அழிந்து போனதென அப்பா
நினைந்துருகியழ
எண்ணெய் வைத்து தலைவாரிவிட்ட அன்ரி குளறியழ
மடியிருத்திப் பேன்பார்த்துன் மழலை மொழி கேட்டு
வடிவுபார்த்த சித்திமார் வாய்விட்டுக் குளறியழ
மணிமகுடம் சூடியாண்ட மருமகன் மடிந்தானென
அணிகள் மகிழ்ந்தளித்த மாமன்மார் மயங்கியழ
அரவணைக்கும் பேரன் அருகில் இல்லையென
அப்பம்மா, அப்பப்பா அழுதழுது மாள

எல்லோரையும் ஏங்கித் துடிக்கவிட்டு

எங்கு சென்றாய் எம் அன்புச்செல்வமே! - நீயிருந்த வீடு, குடியிருந்த கோயில் கொலுவிழந்துகாணப்படுகின்றதே, மீண்டும் வந்துன் அம்மா வயிற்றில் பிறப்பாயோ அன்பு ஜனார்க்குட்டி?

எம் அன்புச் செல்வனின் ஆத்ம சாந்திக்காக நடாத்தப்படும் வைபவத்தில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

– குடும்பத்தவர்கள்

அம்மம்மா, தாத்தா, அப்பா, அம்மா, அன்ரி,
சித்தி, மாமாமார், அம்மாச்சி,
நாவலடி, அப்பப்பா, அப்பம்மா, உற்றார்,
ஊரிக்காடு. (6393) உறவினர்.

## நினைவு கூருகின்றோம்...

## 1993-10-27

1986ஆம் ஆண்டு இதேதினத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் விழுப்புண் அடைந்த நிலையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**ஞானம்** [சின்னையா கிறிஸ்துராஜா - கட்டைபறிச்சான் - திருமலை]

1987ஆம் ஆண்டு யாழ் - கோண்டாவில் ரயில் நிலையப் பகுதியில் இந்தியப் படையினரின் எறிகணைத் தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**கணேஸ்** [பொன்னுத்துரை தர்மலிங்கம் - உரும்பராய் தெற்கு - யாழ்]

வாகன விபத்தில் விழுப்புண் அடைந்து தமிழகம் - மதுரையில் சிகிச்சை பெற்று வரும்போது வீரச்சாவெய்திய -

**தருமன்** [முருகையா ஜெயமுகுந்தன் - உப்புவெளி - திருமலை]

சாவகச்சேரி பொதுச் சந்தை மீது உலங்குவானூர்தியிலிருந்து இந்தியப் படையினர் மேற்கொண்ட கண்மூடித்தனமான எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட ஏராளமான பொதுமக்கள்.

1988ஆம் ஆண்டு அக்கரைப்பற்றுப் பகுதியில் இந்தியப் படையினர் மற்றும் தேசவிரோதிகள் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய –

**லெப் குமார்** [முருகேசு உதயகுமார் - அக்கரைப்பற்று-1 அம்பாறை]

**லெப். சுதா** [கனகசூரியர் திருச்செல்வம் - கல்முனை-02 அம்பாறை]

**அகஸ்ரின்** [சம்சுதீன் அபுல்கசன் - அக்கரைப்பற்று-05 அம்பாறை]

1991ஆம் ஆண்டு வெலிக்கந்தையில் சிறிலங்கா இராணுவத்தினர் மீதான திடீர்த் தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**2-ம் லெப். நிலா** [நிர்மலாதேவி கிருஷ்ணபிள்ளை - குருமண்வெளி - மட்டு]

மட்டு - அம்பாறை 10ஆம் கிராமத்தில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**2-ம் லெப். பாவா** [சுப்பிரமணியம் நாகப்பன் - கொம்மாந்துறை - மட்டு]

1992ஆம் ஆண்டு மன்னார் - பேசாலை குருஸ்பாடு கடற்பகுதியில் மீனவர் படகொன்றின் மீது புளொட் தேசவிரோதிகள் மேற்கொண்ட தாக்குதலில் கொல்லப்பட்ட 3 தமிழர்கள்.

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்**

## தமிழீழ விடுதலைப் புலிகள்

(சி-7784)

நல்லூர் பிரதேச நூலகம்
மாநகர... மன்றம்
யாழ்ப்பாணம்

சிந்தனைக்கு

நிலையில் பிரியேல்

– ஆத்திசூடி

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 27-10-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாக பீடம் 2023
த. பெ. எண் - 05

## தாயகமே பாதுகாப்பு

உலக அரசுகளும், உலக அமைப்புக்களும் இயற்றும் மனித உரிமைச் சட்டங்களும், பிரகடனங்களும் கோவைகளாக நீண்டு கொண்டே செல்கின்றன. அத்தோடு, மனித உரிமைகளை மதித்து நடப்பதாக அரசுகள் அளிக்கும் வாக்குறுதிகளும் குறைவின்றி அதிகரித்துக் கொண்டே செல்கின்றன. ஆனால், உலகில் நடப்பவை என்ன? அரசுகள் தாங்கள் வெளியிட்ட மனித உரிமை சட்டங்களையோ தாம் ஏற்றுக் கொண்ட சர்வதேச சட்டங்களையோ மதிப்பதாகத் தெரியவில்லை. அவற்றைத் தொடர்ந்து மீறி வருவதிலேயே அக்கறையாகவுள்ளன.

இதற்கு, எடுத்துக்காட்டாக, இலங்கைத் தமிழ் அகதிகள் விவகாரத்தில் உலக நாடுகள் இன்று நடந்து கொள்ள முற்படுவதைக் கூறலாம். இதனை முதலில் இந்தியா ஆரம்பித்து வைத்தது. அதாவது, அடைக்கலம் தேடி இந்தியா சென்றவர்களை வெளியேற்றும் முயற்சியில் ஈடுபட்டது. தற்பொழுது அதனை சுவிஸ்சலாந்து அரசாங்கமும் கடைப்பிடிக்க முற்பட்டுள்ளது

இலங்கைத் தமிழ் அகதிகளை அவர்களின் பூரண சம்மதத்துடனேயே வெளியேற்றி வருவதாக இந்தியா தெரிவித்துக் கொள்கின்றது. ஆனால், தமிழகத்தில் இருந்து கிடைக்கும் தகவல்களும், இலங்கை திரும்பிய அகதிகளும் கொடுக்கும் தகவல்களும் அதற்கு எதிர்மாறானவையாகவே உள்ளன. அதாவது அகதிகள் கப்பலில் தூக்கி ஏற்றப்படவில்லையே தவிர, தமிழகத்தில் இருந்து வெளியேற்றுவதற்கான அனைத்து அழுத்தங்களும், நேரடியாகவும், மறைமுகமாகவும் கொடுக்கப்பட்டு வருகின்றது என்பதே உண்மை.

மேலும், இலங்கை திரும்பும் அகதிகளின் பாதுகாப்பு குறித்தும் எதுவித உறுதிப்பாடும் இருப்பதாக இல்லை. இலங்கை திரும்பிய அகதிகள் சிறிலங்கா இராணுவத்தாலும், அவர்களுடன் கூடித்திரியும் தமிழ்க் குழுக்களினாலும், கைது செய்யப்பட்டுள்ளனர் தாக்கப்பட்டுள்ளனர், தடுத்து வைக்கப் பட்டும் உள்ளனர். இதே வேளை, அகதிகளை தாயகத்திற்கு அழைத்து வருவதற்குப் பொறுப்பேற்றுள்ள உலக நிறுவனமும் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவில்லை. எவ்வளவு பேரைக் கொண்டு வந்து சேர்க்கிறோம் என்ற எண்ணிக்கை உயர்வில் அக்கறை காட்டும் அளவிற்கு ஏனையவற்றில் அந்நிறுவனம் அக்கறை காட்டுவதாகத்

# என்னிடம் பதவி விலகுமாறு கோரிக்கை விடப்பட்டது

### அர்ச்சுனா அலுவிகார

(கொழும்பு)

தவறு ஏதும் இழைக்கப்பட்டதாக கருதப்பட்டால் அது பற்றிய விளக்கம் அளிப்பதற்கு கால அவகாசம் வழங்கப்பட வேண்டும். அத்துடன் உயர் பதவிகளின் அந்தஸ்துகளுக்கு மதிப்பளிக்கப்பட வேண்டும் என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் அர்ச்சுனா அலுவிகார கூறியுள்ளார்.

தாம் பதவி விலக்கப்பட்டமை தொடர்பாக பத்திரிகையாளர்களிடம் பேசிய அவர் மேலும் கூறுகையில், ஒரு சதியைப் போல ஜனாதிபதி தவறாக வழி நடத்தப்பட்டிருக்கிறார் என்றும், இவ்விடயம் தொடர்பாக ஆராய்வதற்கு அவருக்கு கடைசி நிமிடம் வரை சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை என்றும் குறிப்பிட்டார்.

பதவியை துறக்குமாறு என்னிடம் கோரப்பட்டது என்பதை தெரிவிக்க நான் வெட்கப்பட வில்லை. ஆனால் எனது உணர்வுகள் இதற்கு எதிராகவே இருந்தன.

மேலும் ஆயுர்வேத வைத்திய மாணவர்களுக்கு மேற்கத்தைய மருத்துவ முறையை போதிக்குமாறு கோரியபோது எதிர்ப்பு தெரிவித்த வைத்திய கவுன்சிலுக்கு எதிராக வழக்கு தொடர்ந்தமை பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை குறைந்தமைக்கு மானிய ஆணைக்குழுவே காரணம் என்ற உணர்வு ஜனாதிபதிக்கு ஊட்டப்பட்டமை என்பன உட்பட தமது ராஜினாமாவைக் கோருவதற்கு பல காரணங்கள் இருக்கலாம் எனவும் குறிப்பிட்டார்.

இவ்வாறு தாம் பதவி இறக்கப்பட்டமை தவறான முன்மாதிரி எனவும், இந்த அணுகுமுறை நாட்டை எதிர்காலத்தில் பாதிக்கலாம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## நிர்வாகப் பதவிகளை ஏற்க கல்விமான்கள் முன்வரக்கூடாது

### - பேராசிரியர் நளின் டி. சில்வா

(கொழும்பு)

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவராக இருந்த பேராசிரியர் அருச்சுனா அலுவிகார பதவி விலக்கப்பட்டது போன்ற சம்பவங்களில் அடுத்துப் பதவியை நிரப்புவதிலிருந்து கல்விமான்கள் விலகி இருக்க வேண்டும் என்று பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத் தலைவரான பேராசிரியர் நளின் டி. சில்வா கூறியுள்ளார்.

அருச்சுனா அலுவிகார பதவி இறக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக கருத்து வெளியிட்ட அவர் மேலும் கூறுகையில், இத்தகைய பதவிகளை நிரப்புவதற்கென்று ஆவலுடன் காத்திருக்கும் பலர் இப்போதும் உள்ளனர். எதிர்காலத்திலும் இருக்கக் கூடும். எனவும் தெரிவித்தார்.

பேராசிரியர் அருச்சுனா அலுவிகாரவுக்கு தனது தரப்பு நியாயத்தை எடுத்துக் கூறுவதற்கே சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை, இத்தகைய ஒழுங்கீனங்கள் 1978ஆம் ஆண்டில் பல்கலைக்கழக நடைமுறைக்கான சட்டம் கொண்டு வரப்பட்டது முதலே இடம்பெற்று வருகிறது. இனிமேலும் இவை தொடரக் கூடும்.

### புதிய சனசமூகநிலையம் திறக்கப்பட்டது

வாணர் குடியிருப்பு கிராம இளைஞர்களால் புலோலி தென் மேற்குப் பிரிவில் புதிய சனசமூக நிலையம் ஒன்று அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. தம்பசிட்டி அ.மி.த.க. பாடசாலை அதிபர் திரு.எஸ். சந்திரசேகரம் சம்பிரதாய பூர்வமாக திறந்து வைத்தார்.

# யோசனை எதையும் முன்வைக்க பாரா௯. தெரிவுக்குழு தவறிவிட்டது

### - சபாநாயகர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

வடக்கு கிழக்கு பகுதிகளில் காணப்படும் பிரச்சினைகளுக்கு இராணுவ ரீதியில் தீர்வு எதுவும் காணப்பட முடியாது என்று சபாநாயகர் எம். எச். முகம்மது கூறியுள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற மாநாடு ஒன்றில் கலந்து கொண்டு பேசிய அவர்மேலும் குறிப்பிடுகையில், இனப்பிரச்சினைத் தீர்வுக்கான யோசனை கூறுவதற்காக நியமிக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக்குழு இதுவரையில் தகுந்த யோசனை எதையும் முன்வைக்கத் தவறிவிட்டதாகவும் குற்றம் சாட்டியுள்ளார்.

வடக்கு, கிழக்கு பகுதியில் காணப்படுவது இனப்பிரச்சினையே அல்ல என்று சிறிலங்கா ஜனாதிபதி டி.பி. விஜேதுங்க திரும்பத் திரும்ப வலியுறுத்தும் சந்தர்ப்பத்தில் சபாநாயகரின் கூற்று மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக அரசியல் அவதானிகள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

மங்கள முனசிங்க தலைமையிலான பாராளுமன்றதெரிவுக்குழு அடுத்தமாதத்தில் தனது இறுதி அறிக்கையை பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யலாம் என்று எதிர்பார்க்கப்படுவது தெரிந்ததே

## பல்தேசிய கம்பெனிகளிடம் மனித உரிமை ஈடு வைக்கப்படுகிறது

### - டி. பி. சுபசிங்க

(கொழும்பு)

திறந்த பொருளாதாரக் கொள்கை கடைப்பிடிக்கப்படுவதால் பெருந்தோட்டத் தொழிலாளரின் அடிப்படை மனித உரிமைகள் பல்தேசிய கம்பெனிகளிடம் ஈடுவைக்கப்படுகின்றது என்று உலக சமாதானக் கவுன்சிலின் முன்னாள் தலைவரும், முன்னாள் அமைச்சருமான டி. பி. சுபசிங்க தெரிவித்தார். ஓவியக் கண்காட்சி ஒன்றைத் தொடர்ந்து கட்டுகம்பொல மனித உரிமைகள் குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்ட கருத்தரங்கு ஒன்றில்கலந்துகொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில்,

அடிப்படை மனித உரிமைகளைப் பாதுகாப்பது அரசாங்கத்தின் பொறுப்பாகும். இனப்பிரச்சினை என்பதுகூட அடிப்படை மனித உரிமைகள் மறுக்கப்பட்டதன் விளைவாக எழுந்ததுதான். இதற்கு பதவியிலிருந்த ஒவ்வொரு அரசும் பொறுப்பேற்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

## அநாதரவாகநின்றகாரினால் கொழும்பில் பரபரப்பு

(கொழும்பு)

கொழும்பு மலிபன் வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 'பென்ஸ்' கார் ஒன்று பாதுகாப்புப் படையினரையும், மக்களையும் பீதிக்குள்ளாக்கியுள்ளது. இதனால் அப்பகுதியெங்கும் அல்லோலகல்லோலப்பட்டது.

இந்தச்சம்பவம் கடந்த சனிக்கிழமை அன்று நடைபெற்றது.

சம்பவதினம் மக்கள் நடமாட்டம் உள்ள மலிபன் வீதியில் காலையிலிருந்து நீண்ட நேரமாகஆடம்பரமாகபென்ஸ் கார் ஒன்று ஆட்கள் இல்லாமல் நின்றதை பலர் அவதானித்துள்ளனர்

இக்காரில் குண்டுகள் பொருத்தப்பட்டிருக்கலாம் என அஞ்சிய சிலர் உடனடியாக பாதுகாப்புப் படையினருக்கு தகவல் கொடுத்தனர்.

அபாய ஒலியுடன் கூடிய வாகனங்களுடன் பாதுகாப்பு படையினர் அவ்விடத்திற்கு ஓடினர். உடனே அப்பகுதியெங்கும் பரபரப்படைந்தது வாகனப்போக்குவரத்து தடைப்பட்டது. அகப்பட்ட வாகனங்களில் ஏறி பாதுகாப்புத் தேடி மக்கள் ஓடினர்

மிகப்பரபரப்பான இச்சம்பவம் பிற்பகல் 4.00 மணிக்கு ஆரம்பமானதெனவும் குறிப்பிட்ட காரை பாதுகாப்புப் படையினர் சென்றடைய மாலை 6.00மணி ஆகிவிட்டது.

குண்டைத் தேடும் நிபுணர்கள் தீவிரமாக தமது கடமையை ஆரம்பித்துவிட்டனர். காரின் கண்ணாடிகள் உடைக்கப்பட்டன கதவுகள் திறக்கப்பட்டன. சோதனைகள் நடத்தப்பட்டன. காரில் எந்தவித குண்டுகளோ வெடிமருந்துகளோ இருக்கவில்லை.

சோதனைகள் முடிவுற்றபின் அவ்விடத்திற்கு வந்த அரச நிர்வாகி ஒருவர் தனது காருக்குநடந்தகதியை எண்ணி வேதனைப்பட்டார் இராணுவத்தினரும் பொலிசாரும் செய்வதறியாது அவ்விடத்தை விட்டு அகன்றனர்.

## அகராதி விற்ற பணம் இயக்கத்திற்கு அனுப்பப்பட்டதா?

சிங்களம்- தமிழ்- ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலுமான அகராதி ஒன்றின் விற்பனை மூலம் பெறப்பட்ட பணத்துக்கு என்ன நடந்தது என்பதை ஆராய்வதில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தற்போது ஈடுபட்டுள்ளனர். இந்த அகராதி விற்பனை மூலம் பெறப்பட்ட பணம் தென் இந்தியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டதாகவும், அங்கு இயக்கம் ஒன்றின் நடவடிக்கைக்கு பயன்படுத்தப் பட்டதாகவும் நம்பப்படுகிறது

தென்னிந்தியாவில் ஆங்கில- தமிழ் அகராதியாக தயாரிக்கப்பட்ட இந்தநூல் கொழும்பிலுள்ள தமிழ் வர்த்தகர் ஒருவரால் கொழும்பில் பின்னர் அச்சிடப் பட்டது. பல்கலைக் கழகமொன்றின் பெண் விரிவுரையாளர்ஒருவரும் இது தொடர்பாக பொலிசாரால் விசாரிக்கப் பட்டுள்ளார். இந்த நூலின் ஒவ்வொரு பிரதியும் ரூபா 35 படி விற்பனை செய்யப்பட்டது.

## மசூதியுள் உள்ள தீவிரவாதிகளை

## வீரப்பன் குழுவில்

## சந்தித்துப்பேச்சு நடத்துவது

இலங்கைத் தமிழ் அகதிகளை அவர்களின் பூரண சம்மதத்துடனேயே! வெளியேற்றி வருவதாக இந்தியா தெரிவித்துக் கொள்கின்றது. ஆனால், தமிழகத்தில் இருந்து கிடைக்கும் தகவல்களும், இலங்கை திரும்பிய அகதிகளும் கொடுக்கும் தகவல்களும் அதற்கு எதிர்மாறானவையாகவே உள்ளன. அதாவது அகதிகள் கப்பலில் தூக்கி ஏற்றப்படவில்லையே !தவிர, தமிழகத்தில் இருந்து வெளியேற்றுவதற்கான அனைத்து அழுத்தங்களும், நேரடியாகவும், மறைமுகமாகவும் கொடுக்கப்பட்டு வருகின்றது என்பதே உண்மை.

மேலும், இலங்கை திரும்பும் அகதிகளின் பாதுகாப்பு குறித்தும் எதுவித உறுதிப்பாடும் இருப்பதாக இல்லை. இலங்கை திரும்பிய அகதிகள் சிறிலங்கா இராணுவத்தாலும், அவர்களுடன் கூடித்திரியும் தமிழ்க் குழுக்களினாலும், கைது செய்யப்பட்டுள்ளனர். தாக்கப்பட்டுள்ளனர், தடுத்து வைக்கப் பட்டும் உள்ளனர். இதேவேளை, அகதிகளை தாயகத்திற்கு அழைத்து வருவதற்குப் பொறுப்பேற்றுள்ள உலக நிறுவனமும் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவில்லை. எவ்வளவு பேரைக் கொண்டு வந்து சேர்க்கிறோம் என்ற எண்ணிக்கை உயர்வில் அக்கறை காட்டும் அளவிற்கு ஏனையவற்றில் அந் நிறுவனம் அக்கறை காட்டுவதாகத் தெரியவில்லை.

மேலும், அகதிகளாக திரும்புபவர்கள் இராணுவத்தின் ஆக்கிரமிப்புப் பகுதியிலேயே வாழவேண்டும் என நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். தமது சொந்த பகுதிகளுக்கு திரும்ப முற்படுபவர்களுக்கு சிறிலங்கா அரசே, அன்றி இப் பணியில் ஈடுபட்டுள்ள நிறுவனமோ ஊக்கம் கொடுப்பதாகவும் இல்லை. சொந்த பகுதிக்கு திரும்பியோருக்கு நிவாரணம் கூட ஒழுங்காக வழங்கப்படுவதில்லை.

இவ்வாறாக, இந்தியாவில் இருந்து இலங்கை தமிழ் அகதிகள் விரட்டப்படுகின்றமையானது ஒரு அரசியல் பழிவாங்கல் நடவடிக்கையே ஆகும். தமிழர் தேசியஇன விடுதலைப் போராட்டத்திற்கு எதிரான நடவடிக்கையுமாகும். ஆனால், சுவிஸ்சலாந்து அரசாங்கம் அகதிகளைத் திருப்பி அனுப்புவது என எடுத்துள்ள முடிவானது வேதனையளிக்கும் ஒன்றாகும்.

அதிலும், கொழும்பில் இன்று தமிழ் மக்கள் நிம்மதியாக வாழவோ, அன்றி அந்நகருக்கு சென்று திரும்ப முடியாத நிலை ஏற்பட்டுள்ள வேளையில், சுவிஸ்சலாந்து அரசாங்கம் இம் முடிவை எடுத்துள்ளது. இதேவேளை, சுவிஸ் அரசாங்கத்தின் இம் முடிவானது மனிதனின் அடிப்படை உரிமைகளையும், சுவிஸ் செய்து கொண்டுள்ள சர்வதேச ரீதியான மனித உரிமைகள் சட்டங்களுக்கும் விரோதமான செயலுமாகும் மேலும் சுவிஸ் அரசாங்கம் இந்த நடவடிக்கையை எதன் அடிப்படையில் மேற்கொள்ளத் தீர்மானித்தது என்பது ஆச்சரியமாகவும் உள்ளது. சுவீடன் நாட்டுப் பிரதிநிதிகள், இலங்கைக்கு அகதிகளைத திருப்பி அனுப்பும் சூழ்நிலை இல்லை எனக் கண்டறிந்துள்ள வேளையில், சுவிஸ்சலாந்து எவ்வாறு இம் முடிவிற்கு வந்துள்ளது என்பது கேள்விக்குரியதாகவே உள்ளது.

இந் நிலையில், இந்தியா போன்று இல்லாது, அகதிகளைத் திருப்பிஅனுப்புவது குறித்து சுவிஸ்சலாந்து அரசாங்கம் மறுபரிசீலனை செய்யவேண்டும். அவ்வாறு இல்லாது விட்டால் சிங்களப் பேரினவாதம் மேற்கொண்டு வரும் இனப் படுகொலைக்கும் அது தொடர்பான மனித உரிமை மீறல்களுக்கும் சுவிட்சலாந்து அரசாங்கமும் மறைமுகமாக ஆதரவளிப்பதாகவே கருத இடமுண்டு. ஆனால், சுவிட்சலாந்து அரசாங்கம் என்ன முடிவு எடுப்பினும் சரி, அங்குள்ள அகதிகள் ஒன்றை மட்டும் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். அதாவது, ஒருவருக்கு தமது தாயகத்தைத் தவிர பாதுகாப்பான இடம் உலகில் இல்லை என்பதும், எங்கிருந்தாலும் இறுதியில் தாயகத்திற்கே வந்தாக வேண்டும் என்பதுமே நிதர்சனமாகும்.

# யோசனை எதையும் முன்வைக்க பாராளு. தெரிவுக்குழு தவறிவிட்டது

**- சபாநாயகர் குற்றச்சாட்டு**

(கொழும்பு)

வடக்கு கிழக்கு பகுதிகளில் காணப்படும் பிரச்சினைகளுக்கு இராணுவ ரீதியில் தீர்வு எதுவும் காணப்பட முடியாது என்று சபாநாயகர் எம். எச். முகம்மது கூறியுள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற மாநாடு ஒன்றில் கலந்து கொண்டு பேசிய அவர்மேலும் குறிப்பிடுகையில், இனப்பிரச்சினைத் தீர்வுக்கான யோசனை கூறுவதற்காக நியமிக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக்குழு இதுவரையில் தகுந்த யோசனை எதையும் முன்வைக்கத் தவறிவிட்டதாகவும் குற்றம் சாட்டியுள்ளார்.

வடக்கு, கிழக்கு பகுதியில் காணப்படுவது இனப்பிரச்சினையே அல்ல என்று சிறிலங்கா ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க திரும்பத் திரும்ப வலியுறுத்தும் சந்தர்ப்பத்தில் சபாநாயகரின் கூற்று மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக அரசியல் அவதானிகள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

மங்கள முனசிங்க தலைமையிலான பாராளுமன்றதெரிவுக்குழு அடுத்தமாதத்தில்தனது இறுதி அறிக்கையை பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யலாம் என்று எதிர்பார்க்கப்படுவது தெரிந்ததே

...வாகனங்களுடன் பாதுகாப்பு படையினர் அவ்விடத்திற்கு ஓடினர். உடனே அப்பகுதியெங்கும் பரபரப்படைந்தது ... வேதனைப்பட்டார் இராணுவத்தினரும் பொலிசாரும் செய்வதறியாது அவ்விடத்தை விட்டு அகன்றனர்.

# அகராதி விற்ற பணம் இயக்கத்திற்கு அனுப்பப்பட்டதா?

சிங்களம்- தமிழ்- ஆங்கிலம் ஆகிய மும் மொழிகளிலுமான அகராதி ஒன்றின் விற்பனை மூலம் பெறப்பட்ட பணத்துக்கு என்ன நடந்தது என்பதை ஆராய்வதில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தற்போதுஈடுபட்டுள்ளனர். இந்த அகராதி விற்பனை மூலம் பெறப்பட்ட பணம் தென் இந்தியாவுக்கு அனுப்பி வைக்கப் பட்டதாகவும், அங்கு இயக்கம் ஒன்றின் நடவடிக்கைக்கு பயன்படுத்தப் பட்டதாகவும் நம்பப்படுகிறது

தென்னிந்தியாவில் ஆங்கில- தமிழ் அகராதியாக தயாரிக்கப்பட்ட இந்தநூல் கொழும்பிலுள்ள தமிழ் வர்த்தகர் ஒருவரால் கொழும்பில் பின்னர் அச்சிடப் பட்டது. பல்கலைக் கழகமொன்றின் பெண் விரிவுரையாளர்ஒருவரும் இது தொடர்பாக பொலிசாரால் விசாரிக்கப் பட்டுள்ளார். இந்த நூலின் ஒவ்வொரு பிரதியும் ரூபா 35 படி விற்பனை செய்யப்பட்டது.

# மசூதியுள் உள்ள தீவிரவாதிகளை சரணடைய இராணுவம் கோரிக்கை

(டில்லி)

ஹசரத்பல்மசூதியினுள்இருக்கும் முஸ்லிம்தீவிரவாதிகளை சரணடையும்படி நேற்றுமுன்தினம்இந்திய இராணுவம் ஒலிபெருக்கிகள் மூலம் மீண்டும் மீண்டும்அறிவித்தவாறு காணப்பட்டனர். மசூதியினுள் சிக்கியுள்ள பெண்கள், சிறுவர்கள், வயோதிபர்களை மசூதியிலிருந்துவெளியே வரும்படியும் படையினர் கோரினர்.

உணவு மற்றும் மருத்துவ வசதிகள் மசூதி வளாகத்தின் வெளியே தயாராக வைக்கப் பட்டுள்ளபோதிலும்மசூதியை விட்டு வெளியேற எவரையும் தீவிரவாதிகள் அனுமதிக்கவில்லை என இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சிறீநகர் பகுதியில் ஊரடங்குச் சட்டம் தளர்த்தி விடப் பட்டுள்ளபோதிலும் மசூதியை சுற்றியுள்ள பகுதிகளில் முன்னெச்சரிக்கையாக ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ளது.

காஷ்மீரில் இந்திய இராணுவத்தினால் முற்றுகைக்கு உள்ளாகியுள்ள ஹசரத்பல் மசூதி நிலைகுறித்து உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் பரிசீலனை செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை காஷ்மீரில் ஆர்ப்பாட்டம் செய்த பொதுமக்கள் மீது இராணுவம் நடத்தியதுப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட 40 பேரினதும் நெருங்கிய உறவினர்களுக்கு அரசு ஒரு லட்சம் ரூபா நட்டஈடு வழங்கவுள்ளது.

# பேச்சுவார்த்தைகள் மூலம் உடன்பாடு காண்பது எளிது

**- மு. கருணாநிதி**

(சென்னை)

கட்சியின் உறுப்பினர்களிடையே ஏற்படும் மாறுபாடுகள் குறித்து பேச்சுவார்த்தைகள் மூலம் உடன்பாடு காண்பது எளிதானது என்று தி. மு. க தலைவர் கருணாநிதி மறைமுகமாக சுட்டிக்காட்டியுள்ளார்.

கழகப் பொதுச்செயலாளர் அன்பழகன் எழுதிய தமிழர் திருமணமும், இன மானமும் என்ற நூலை அண்மையில் வெளியிட்டு வைத்த வைபவத்தில் உரைநிகழ்த்திய கருணாநிதி மேலும் கூறுகையில்,

திருமணத்திற்குப் பின்னர் தம்பதிகளுக்கு இடையே கருத்து மாறுபாடு ஏற்பட்டால் அது குறித்துப் பேசித் தீர்த்துக் கொள்ள வேண்டும். இந்தச் செய்தியை நான் நூலின் முன்னுரையிலும் குறிப்பிட்டுள்ளேன். இந்த முன்னுரை மூன்று மாதங்களுக்கு முன்பே எழுதப்பட்ட ஒன்று என்ற போதிலும், இந்த மேற்கோள் நேற்றும் இன்றும், நாளையும் பொருந்தக் கூடியது ஆகும். ஒரு காலத்தில் மாறுபாடு எழுந்தாலும், அதைக் காட்டிக்கொள்ளாமல் சிறிது காலம் கழித்து அல்லது ஓரிரு நாள் கழித்து அது குறித்து எண்ணிப் பார்த்த பின்னர் உரையாட முற்பட்டால் உடன்பாடு காண்பது எளிதானதாகும். மாறுபாட்டை தடிக்க வைத்துக் கொள்வது, ஒத்துப் போகும் வாய்ப்பை குறைத்து உடன்படக் கூடியவற்றிலும் வேற்றுமையான நோக்கம் காண்பது பிளவுபடவே வழிவகுக்கும். இந்த மேற்கோள் குடும்ப வாழ்க்கைக்கு மட்டுமன்றி பொதுவாழ்வுக்கும் பொருந்தக் கூடியதாகும் எனவும் கருணாநிதி குறிப்பிட்டார்.

# வீரப்பன் குழுவில் மூவர் பலியாம்

(சென்னை)

சந்தனமரக் கடத்தல்காரன் வீரப்பன் குழுவினருக்கும் தமிழக கர்நாடக அதிரடிப்படையினருக்குமிடையே அண்மையில் சந்தேமல்கள காட்டுப்பகுதியில் நடைபெற்ற மோதலில் வீரப்பன் குழுவைச் சேர்ந்த மூவர் கொல்லப்பட்டனர் என அதிரடிப்படைத் தலைவர் தேவாரம் தெரிவித்துள்ளார்.

# பட்டினி 50 சதவீதம்

(வாசிங்டன்)

அமெரிக்காவில் பட்டினியால் வாடும் மக்களின் எண்ணிக்கை ஐம்பது சதவீதத்தால் உயர்ந்திருப்பதாக உலக நாடுகளின் உணவு விவகாரத்தில் அக்கறை செலுத்தும் நிறுவனம் தெரிவித்துள்ளது.

மேற்படி நிறுவனத்தின் வருடாந்த அறிக்கை அண்மையில் வெளியிடப்பட்டது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது, அமெரிக்காவில் 1985 ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் தற்போது 50 சதவீத உயர்வு ஏற்பட்டிருப்பதாகவும் கூறப்பட்டுள்ளது. சுமார் மூன்றுகோடி அமெரிக்கர்கள் பட்டினியால் அல்லலுறுகின்றனர். மூன்று கோடியே 69 லட்சம் பேர் 1962-ம் ஆண்டு முதல் பட்டினியால் அல்லலுறும் மக்கள் தரத்தினராக உள்ளனர். உலகெங்கும் பட்டினிக்கொடுமை தலைவிரித்தாடுகின்றது. சுமார் 100 கோடி 30 இலட்சம் பேர் போஷாக்கு மிக்க உணவு வகைகளை ஒருநேர உணவாகக்கூட எடுக்க இயலாமல் திண்டாடுகின்றனர் என்றும் அவ் அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# சந்தித்துப்பேச்சு நடத்துவது இப்போது அவசியமில்லை

**வை.கோபால்சாமி தெரிவிப்பு**

(சென்னை)

கலைஞரை சந்தித்துப் பேசுமாறு சிலர் ஆலோசனை கூறுகின்றனர், ஆனால் அது அவசியமில்லை. சந்திப்பு நடைபெற்றால் என்னை மன்னித்து விட்டதாக அறிக்கை விடுவார். எனினும் என்மீது சுமத்தப்பட்ட பழி என்ன ஆவது? மன்னிப்பதற்கு நான் செய்த குற்றம் தான் என்ன? என்று தி.மு.கவின் முக்கிய பிரமுகரும், ராஜ்ய சபா எம்.பியுமான வை. கோபால்சாமி கேள்வி எழுப்பியுள்ளார்.

என்மீது சுமத்தப்பட்டுள்ள களங்கம் துடைக்கப்படும் வரை ஓயமாட்டேன் என்று சபதம் எடுத்துள்ள வை.கோ நிருபர்கள் மத்தியில் பேசும் போது மேலும் குறிப்பிடுகையில்,

கருணாநிதியை கொலை செய்ய விடுதலைப் புலிகள் திட்டமிட்டிருப்பதாக கூறப்பட்டிருப்பதுடன் என்னையும் சம்பந்தப்படுத்தி அபாண்டமான பழி சுமத்தப் பட்டுள்ளது. மு.க.வை விட்டு என்னை ஒழித்துக்கட்ட முரசொலி மாறனும், ஸ்டாலின், அழகிரி ஆகியோரும் தீட்டிய சதியின் ஒரு அங்கமே இந்தப் பழி ஆகும். தி. மு. கவின் பொதுக் குழுவைக் கூட்டி இப் பிரச்சினை விவாதிக்கப்பட்டாக வேண்டும். சதி செய்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டும். அதுவரை என் முயற்சிகள் நிற்கப் போவதில்லை. என் மீது சுமத்தப்பட்ட பழியை தொண்டர்கள் நம்பவில்லை என்பதால் என்னைப் போட்டித் தலைவராக சித்திரித்துக் காட்ட கருணாநிதி முற்பட்டுள்ளார் என்றும் தெரிவித்தார்

# மாநில வளர்ச்சித் திட்டங்களுக்கு மத்திய அரசுவிரைவில்ஒப்புதல் தரும்

**முதல்வர் ஜெயலலிதா கோரிக்கை**

(சென்னை)

தமிழ்நாடுமாநிலத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் பல்வேறு வளர்ச்சிப்பணிகளுக்கும் மத்திய அரசு விரைவில் ஒப்புதல் வழங்க வேண்டும் என்று தமிழக முதல்வர்செல்வி ஜெயலலிதா பிரதமர் பி. வி. நரசிம்மராவிடம்நேற்று முன்தினம் கோரிக்கை விடுத்தார்

சென்னையில் தனியார் மருத்துவ மனையில் சிகிச்சை பெறும் உபஜனாதிபதி கே. ஆர். நாராயணனை நேரில் சந்திக்க வந்த பிரதமர் பி.வி நரசிம்மராவுடன் விமான நிலையத்தில் உரையாடிய போது முதல்வர் ஜெயலலிதா மேற்படி கோரிக்கையை தெரிவித்தார்

சிங்கப்பூர் இந்திய வர்த்தக மையம் அமைக்கும் திட்டம், தென்மாநில எரிவாயு இணைப்பு திட்டம், விரைவு ரயில் போக்குவரத்துதிட்டம், புதிய வீராணம் திட்டம், தென்மாநில நதிநீர் இணைப்பு திட்டம் என்பன உட்பட பல்வேறு திட்டங்கள் பற்றியும் பிரதமர் நரசிம்மராவுக்கு முதல்வர் ஜெயலலிதா விளக்கினார் என்றும் மத்திய அரசின் ஒப்புதலையும் நிதி உதவியையும் முதல்வர் கோரினார். என்றும் தமிழக அரசின் செய்திக்குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈழநாதம்

# கொழும்பிலுள்ள அகதிமுகாம்கள் விரைவில் மூடப்பட்டுவிடும்

## -சமூக சேவைப் பணிப்பாளர்

(கொழும்பு)

கொழும்பில் எஞ்சியுள்ள அகதி முகாம்கள் விரைவில் மூடப்படும் என சமூக சேவை பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

கொழும்பிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் மொத்தம் 12 அகதி முகாம்கள் இயங்கி வருவதாகவும் இதில் 4 ஏற்கனவே மூடப்பட்டுள்ளதாகவும் ஏனையவை விரைவில் மூடப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

எஞ்சியுள்ள 8 அகதிமுகாம்களில் ஒன்றில் தமிழ்க் குடும்பங்களும் (14 குடும்பங்கள்) ஏனைய ஏழில் 201 முஸ்லிம் குடும்பங்களும் உள்ளன.

இந்த முகாம்களில் உள்ள அகதிகள் சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள் என்றும்பணிப்பாளர் மேலும் சொன்னார்

இது இவ்விதம் இருக்க பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டப அகதி முகாமில் உள்ள அகதிகள் எதிர்வரும் டிசம்பர் வரை தங்கியிருப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

இம் மாதம் 21ஆம் திகதியுடன் மூடப்பட்டு முகாமில் உள்ள அகதிகள் சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட இருந்தனர் ஆனால் முகாமிலுள்ள மாணவர்கள் பலர் க. பொ. த. சாதாரண வகுப்புக்களிலும் ஏனைய வகுப்புகளிலும் கல்வி கற்பதால் மாணவர்களின் நன்மை கருதி டிசம்பர்வரை முகாமை மூடாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு இந்த அகதிகள் வேண்டுகோள்விடுத்திருந்தனர்.

பொன்விழா ஞாபகார்த்த

# நூல்நிலைய கட்டட அடிக்கல் நாட்டல்

யாழ் இந்து மகளிர் கல்லூரியின் பொன்விழாஆண்டினை நினைவு கூரும் முகமாக பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினால் 15 இலட்சம் ரூபா செலவில் பொன்விழா ஞாபகார்த்த நூல் நிலையக் கட்டடத்திற்கான அடிக்சல் நாட்டும் வைபவம் நாளை வியாழக்கிழமை காலை 9. 30 மணிக்கு கல்லூரி வளாகத்தில் நடைபெறவுள்ளது. இவ்விழாவிற்கு கல்லூரி அதிபர் திருமதி ச. ஜெயராசா தலைமை தாங்க முன்னாள் அதிபர் திருமதி தி. நாகராசா அவர்களால் அத்திவாரக்கல் நாட்டி வைக்கப்படும். இதற்கான ஒழுங்குகளை பாடசாலை அபிவிருத்திச்சங்கமும் பொன்விழா சபையும் செய்து வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.


யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

கணக்கியல் ஆசிரியர்

க. பொ. த (உ. த) வகுப்புகளில் கணக்கியல்/வர்த்தகப் பாடங்களைக் கற்பிப்பதற்கு தகுதி உடைய ஆண் ஆசிரியர்கள் தேவை. உடன் அதிபருக்கு விண்ணப்பிக்கவும்.

பழைய மாணவர் சங்கம்
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

(சி-7789)

யாழ் நகர் ஸ்ரீதர் திரையரங்கில்

ROARING FIRE

[முழு நீள கராட்டிச் சித்திரம்]

தினசரி மாலை 4.00 மணி, 6,00 மணிக்கு

சனி, ஞாயிறு தினங்களில்

காலை 10-30மணி, பிற்பகல் 2. 30 மணி

மாலை 4, 6 மணிக்கு காண்பிக்கப்படும்


# ஆராய்ச்சிநிலையம் திறப்புவிழா

சித்தவைத்திய ஆராய்ச்சி நிலையம் இன்று மாலை 3 30 மணிக்கு யாழ். நாச்சிமார் கோவில் அருகாமையில் திறந்து வைக்கப்படவுள்ளது என இலங்கை சித்த வைத்திய ஆராய்ச்சி மன்றத்தினர் அறிவித்துள்ளனர்

யாழ்ப்பாணத்தில்

கருணாதிலக, விஜேவாலிட சொய்சா ஆகியோரும், அசோஸியேட்டட்டைச் சேர்ந்த ரெக்ஸ் குருஸ் ஆகியோரும் வந்தனர் இவர்களில் படப்பிடிப்பாளர் ஒருவரும் வீடியோ படப்பிடிப்பாளர் இருவரும் அடங்குவர் ஒரு வாரம் இவர்கள் இங்கு தங்கியிருப்பர்.

கிளிநொச்சி

தது. அதனைத் தொடர்ந்து கண்டனப் பொதுக் கூட்டம் நடைபெற்றது. இதில் விவ

# றுகுணுவில் அரச அதிபர்

(நமது நிருபர்)

பருத்தித்துறைக்கு மண்ணெண்ணையுடன் வரவுள்ள றுகுணு கப்பலில் யாழ். அரசாங்க அதிபரும் வரவுள்ளதாக செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தற்போது கொழும்பில் மண்ணெண்ணெய் ஏற்றும் பணியில் ஈடுபட்டுள்ள றுகுணு கப்பல் ஓரிரு தினங்களில் இங்கு வந்துசேரும் என எதிர் பார்க்கப்படுகிறது. (ச), (சி)

# கல்விக் கருத்தரங்கு

மாறறம் சஞ்சிகையினரால் நல்லூர், நாயன்மார்கட்டு, திருநெல்வேலி, கொக்குவில் ஆகியபகுதி பாடசாலைகளின் க. பொ. த. (சா த) மாணவர்களுக்கான தமிழ்க் கல்விக் கருத்தரங்கு நாளை 28ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 00 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடாத்தப்படவுள்ளது. இக் கருத்தரங்கில் கல்விமான்கள், பிரபல ஆசிரியர்கள் கலந்து கொண்டு கருத்துரையாற்றவுள்ளனர்.

சிங்கள

ஈட்டி கொடுக்கின்றீர்கள் யாழ்ப்பாண மக்கள் தொகை 4½ லட்சம். ஆனால் 10லட்சம் என கூட்டி காட்டியுள்ளீர்கள் என பத்திரிகைகளில் செய்தி வந்துள்ளதே?

பதில்: யார் இந்த உயர் அதிகாரி டெய்லிநியூஸ் பத்திரிகைக்கு பேட்டி கொடுத்தார் என்பது எனக்கு தெரியவில்லை. ஆனால் சனத்தொகையை பொறுத்தவரையில் ஆரம்பத்தில் 8 லட்சம் பேர் இருந்ததாக புள்ளிவிபரங்கள் கூறுகின்றன இதில் சுமார் இருலட்சம் மக்கள் வெளியேறியிருந்தாலும் இந்த 13வருடத்திற்குரிய சனத்தொகையை அவர்கள் கணக்கில் எடுக்கவில்லை. இரண்டாவது வெளிமாவட்டங்களிலிருந்து யாழ். மாவட்டத்திற்கு வந்துள்ள அகதிகள் தொகையையும் அவர்கள் கணக்கில் எடுக்கவில்லை குடும்ப அட்டைகளின் படி இருலட்சம் அட்டைகள் உள்ளன. இதில் வீட்டுக்கு நால்வர்என்று பார்த்தால் 8 லட்சம் பேருக்கு மேல் என்பது நிச்சயமாகின்றது.

மண்ணெண்ணெய்யைப் பொறுத்த வரையில் பத்திரிகைக்கு தகவல் கொடுத்தவர் நினைக்கின்றார்போலும் வீட்டுக்கு தனியொரு குப்பிலாம்பு போதும் என்று அப்படியல்ல விவசாயத்திற்கு அலுவலகத்திற்கு தூர இடங்களில் இருந்து வருபவர்களின் வாகனங்களுக்கு டாக்டர்களுக்கு மண்ணெண்ணெய் கொடுக்க வேண்

# சு. கட்சியை பிளவுபடுத்த ஐ. தே. கட்சி சதிசெய்கிறது

## -சிறிமாவோ குற்றச்சாட்டு

(கொழும்பு)

தமக்கும் தமது மகனுக்கும் இடையிலான சர்ச்சையை மேலும் விரிவுபடுத்தி கட்சியில் பிளவை ஏற்படுத்த ஆளும் ஐ தே. க. சதி செய்வதாக சுதந்திரக்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா குற்றம்சாட்டியுள்ளார்.

அநுராவை தமது கட்சியில் வந்திணையுமாறு ஐ தே. க. அழைப்பது அவர் மீது கொண்ட அன்பினாலல்ல சுதந்திரக் கட்சியையும், அநுராவையும் அழித்துவிடுவதே அதன் நோக்கம். சுதந்திரக் கட்சியில் பிளவை ஏற்படுத்தி தான் தொடர்ந்து ஆட்சியில் இருக்கவே ஐ. தே. க திட்டமிடுகின்றது என்றும் சிறிமாவோ பண்டார நாயக்கா பேட்டி ஒன்றில் கூறியுள்ளார்.

அநுராவை முன்னதாக கட்சியிலிருந்து நீக்கிய போதிலும் ஏன் அவர் மீது பல நாட்களாக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யவில்லை என்று கேட்டபோது, குற்றப்பத்திரிகையோ அல்லது ஒழுக்காற்று நடவடிக்கையோ எனது மகனுக்கு எதிராக எடுக்க நான் விரும்பவில்லை. அவர் தனது பிரச்சினையை சுமுகமாக தீர்த்துக்கொள்ள கால அவகாசம் வழங்கினேன். எந்தத் தாயாரும் தனது பிள்ளைக்கு இப்படித் தான் செய்வார். அநுரா கட்சியைவிட்டு இராஜினாமா செய்ததும் என்னை குற்றஞ் சாட்டினார். நான் அவரை எனது மகன்போல் கருதி செயற்பட்டதற்காக ஏனைய கட்சி உறுப்பினர்களின் குற்றச்சாட்டுகளை கேட்க நிர்ப்பந்திக்கப்பட்டதை அநுரா அறியமாட்டார் என்றும் சிறிமாவோ பண்டாரநாயக்கா தெரிவித்தார்.

வடக்கு-கிழக்கு பிரச்சினை தீர்வுக்கு தமது கட்சி முக்கிய இடமளிக்கும் என்றும் கட்சியின் திட்டங்கள் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்படும் என்றும் சுதந்திரக் கட்சித் தலைவி அப் பேட்டியில் கூறினார்.

ஐ தே. க.

யிலிருந்து அநுரா பண்டாரநாயக்கா இராஜினாமா செய்ததும் அவரை ஆளும்கட்சியில் சேர்ந்து கொள்ளுமாறு அமைச்சர் சிறிசேனா கூரே அழைப்பு விடுத்திருந்ததும் தெரிந்ததே.

ராணுவம்

தனர் இதேதினம் அதிகாலை 5 30 மணியளவில் உன்னிச்சை இராணுவத்தினரும் ரெலோ குழுவினரும் சேர்ந்து ஆயித்தியமலை, படுகாடு என்ற இடங்களை சுற்றிவளைத்து திருமணமானவர்களான கன்னன்குடாவைச்சேர்ந்த காத்தமுத்து அரசரத்தினம், உன்னிச்சையைச்சேர்ந்த பாக்கியராசா மரியதாஸ் புல்லுமலையைச்சேர்ந்த அருமைராசா பிரசாத், களுவாஞ்சிக்குடியைச் சேர்ந்த செல்லப்பா சௌக்கியதாஸ் ஆகிய நான்கு பொதுமக்களை கைது செய்து உன்னிச்சை முகாம் கொண்டு சென்றனர்

இராணுவம் பின்

கதை'' என்ற தலைப்பில் ஒப்பரேஷன் யாழ்தேவி நடவடிக்கையில இராணுவ தரப்பில் இந் நடவடிக்கை குறித்து திட்டமிடப்பட்ட களத்தில் ஏற்பட்ட நிகழ்வுகள், படையினர் இழந்த இராணுவ தளபாடங்கள் என்பவை குறித்து விபரமான விளக்கத்துடன் செய்தி கட்டுரை எழுதியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# யாழ். பாடசாலைகள் உதைபந்தாட்ட போட்டி

யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையேயான மாவட்ட நிலை உதைபந்தாட்டப் போட்டிகளில் 15 வயதுப் பிரிவில் இன்று பின்வரும் பாடசாலைகளுக்கிடையே போட்டிகள் நடைபெறவுள்ளன.

இப் போட்டிகள் பிற்பகல் 2-30 மணிக்கு ஆரம்பமாகும் கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானம், கொடிகாமம் திருநாவுக்கரசு எதிர் புனிதயோசப் ம. வி. யாழ். இந்துக்கல்லூரி எதிர் புனித ஹென்றியரசர் கல்லூரி, யூனியன் கல்லூரி எதிர்உரும்பராய் இந்துக் கல்லூரி; நெல்லியடி மத்திய ம. வித்தியாலய மைதானம் புங்குடுதீவு ம. வி எதிர்தேவரையாளி இந்துக் கல்லூரி, இமையாளன் அ. த. க பாடசாலை எதிர் சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி; ஹாட்லி கல்லூரி மைதானம் அருணோதயா கல்லூரி எதிர் உடுப்பிட்டி அ. மி. க, இளவாலை மெய்கண்டான் எதிர் நெல்லியடி ம ம. வி; மட்டுவில் ம. வி. மைதானம் சாவகச்சேரி இந்துக்கல்லூரி எதிர் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, டிறிபேக்கல்லூரி எதிர் புங்குடுதீவு சண்முகானந்தா, கனகரத்தினம் ம.வி எதிர் மட்டுவில் ம.வி

போர்

பத்திரிகையாளர் மீது மிரட்டல் விடுக்கப்படுகிறது என்றும் அப்பத்திரிகையின் ஆசிரிய தலையங்கம் எழுதப்பட்டுள்ளது.

# உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

## 26.10.93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 11418

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

24 5172, 26 6842, 51-2509, 26-1585, 42 0488
42 9625, 24-1250, 26-4393.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

26 3177, 28 5484, 27 4162, 27-1939, 22-6468
41 9211, 42 3419, 40-0774, 26 7663, 28-4672
27-9404, 26-5734, 26-6062, 26-6526, 26-6461
27-5725,

## கணக்கியல் ஆசிரியர்

க. பொ. த (உ. த) வகுப்புகளில் கணக்கியல் வர்த்தகப் பாடங்களைக் கற்பிப்பதற்கு தகுதி உடைய ஆண் ஆசிரியர்கள் தேவை. உடன் அதிபருக்கு விண்ணப்பிக்கவும்.

பழைய மாணவர் சங்கம்
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

(சி-7789)

## யாழ் நகர் ஸ்ரீதர் திரையரங்கில்

## ROARING FIRE

[முழு நீள கராட்டிச் சித்திரம்]

தினசரி மாலை 4.00 மணி, 6.00 மணிக்கு
சனி, ஞாயிறு தினங்களில்
காலை 10-30மணி, பிற்பகல் 2. 30 மணி
மாலை 4, 6 மணிக்கு காண்பிக்கப்படும்

(சி-7544)

## பகுதிநேர விரிவுரையாளர்கள்
### கல்வியாண்டு, 1994
### தொழில்நுட்பக்கல்லூரி -யாழ்ப்பாணம்.

1993-10 01 ஆம் திகதி அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட திறகிணங்க இக்கல்லூரியில் 1994ஆம் கல்வியாண்டிற்குப் பகுதிநேர விரிவுரையாளர்கள் தேவைப்படும் பாடவிபரம், மாதிரி விண்ணப்பப்படிவம் என்பன இக்கல்லூரியின் விளம்பரப்பலகையில் உள்ளன. தகுதியானவர்கள் மாதிரிப் படிவத்திற்கிணங்க விண்ணப்பங்களை அதிபர், தொழில்நுட்பக் கல்லூரி, பிறவுண்வீதி, யாழ்ப்பாணம். என்ற முகவரிக்கு 1993 11-10ஆம் திகதி அல்லது முன்னர் கிடைக்கத்தக்கதாக பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கவும் நேரடியாக விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

தொழில்நுட்பக்கல்லூரி,
பிறவுண்வீதி, யாழ்ப்பாணம்.
1993-10-26

க ஜெயரத்தினம்
அதிபர்

(சி-7787)

## வாழ்த்துகிறோம்

கடந்த ஒன்றரை நூற்றாண்டுகளுக்கும் மேலாக
பணிகளின் பாதையிலே
பற்பல படிகளைத் தாண்டி
இம் மாதம் 27ஆம் நாள்
தமது சபை நிறுவனர்
**வண. பிதா பீற்றர் பியர்வெறு நோகு அடிகளாரின்**
**200 ஆவது**
**பிறந்த நாளைக் கொண்டாடும்**
திருகுடும்பச் சபைச் சகோதரிகள்
இறையருளும் உடல் நலனும் பெற்று
பணி வாழ்விலே
முன்னேறிச் செல்ல
உளமார வாழ்த்துகிறோம்
அவர்களோடு இணைந்து
இறை புகழ்பாட
வாசக நேயர்களையும் அழைக்கிறோம்.

— மாகாணத் தகவற் சேவைக் குழு.
யாழ்ப்பாணம்.

(6388)

### திறப்புவிழா

சித்தவைத்திய ஆராய்ச்சி நிலையம் இன்று மாலை 3 30 மணிக்கு யாழ். நாச்சிமார் கோவில் அருகாமையில் திறந்து வைக்கப்படவுள்ளது என இலங்கை சித்த வைத்திய ஆராய்ச்சி மன்றத்தினர் அறிவித்துள்ளனர்

### யாழ்ப்பாணத்தில்

கருணாதிலக, வினோலிட சொய்சா ஆகியோரும், அசோஸியட்டட்டைச் சேர்ந்த ரெக்ஸ்ர் குரூஸ் ஆகியோரும் வந்தனர் இவர்களில் படப்பிடிப்பாளர் ஒருவரும் வீடியோ படப்பிடிப்பாளர் இருவரும் அடங்குவர் ஒரு வாரம் இவர்கள் இங்கு தங்கியிருப்பர்.

### கிளிநொச்சி

தது. அதனைத் தொடர்ந்து கண்டனப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. இதில் விவசாய பீடாதிபதி பேராசிரியர் மோகனதாஸ் கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலய அதிபர் சோதிநாதன், விவசாயபீட பயிரியல் துறைதலைவர் இராசதுரை மற்றும் மாணவன் யோகராசா ஆகியோர் உரையாற்றினர்.

ஜனாதிபதி விஜேதுங்கவிற்கு அனுப்பவென தயாரிக்கப்பட்ட கண்டன அறிக்கை வாசிக்கப்பட்டது. பின்னர் உதவி கல்விப் பணிப்பாளர் தர்மரெட்ணத்திடம் இது கையளிக்கப்பட்டது.

### குடும்ப

சேர்ந்த கிராம அலுவலர்கள், யாழ். மத்திய பஸ் நிலையத்திற்கு, முன்பாக அமைந்துள்ள குடும்பப்பதிவு அட்டைச் செயலகத்திலும், சண்டிலிப்பாய், சங்கானை, உடுவில், தெல்லிப்பளை, உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளைச் சேர்ந்த கிராம அலுவலர்கள், கோண்டாவில் புகையிரத நிலைய வீதியில் அமைந்துள்ள குடும்பப்பதிவு அட்டை செயலகத்திலும், சாவகச்சேரி, பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளைச் சேர்ந்த கிராம அலுவலர்கள், சாவகச்சேரி அவசர பயண அனுமதி வழங்கும் செயலகத்தில் இயங்கும் குடும்பப்பதிவு அட்டைச் செயலகத்திலும், கரவெட்டி, பருத்தித்துறை, மருதங்கேணி, உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளைச் சேர்ந்த கிராம அலுவலர்கள் மாலுசந்தியில் இயங்கும் குடும்பப்பதிவு அட்டை செயலகத்திலும், ஒப்படைக்கும்படியும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்,

மேற்குறிப்பிட்ட திகதிக்குள் ஒப்படைக்காமையினால் ஏற்படும் வீண் சிரமங்களை தவிர்த்துக்கொள்ளுமாறு போக்குவரத்து கண்காணிப்பு பிரிவின் குடும்ப அட்டைப் பகுதியினர் கேட்டுக்கொண்டுள்ளனர்.

லும் இந்த 13வருடத்திற்குரிய சனத்தொகையை அவர்கள் கணக்கில் எடுக்கவில்லை. இரண்டாவது வெளிமாவட்டங்களிலிருந்து யாழ். மாவட்டத்திற்கு வந்துள்ள அகதிகள் தொகையையும் அவர்கள் கணக்கில் எடுக்கவில்லை குடும்ப அட்டைகளின் படி இரு லட்சம் அட்டைகள் உள்ளன. இதில் வீட்டுக்கு நால்வர் என்று பார்த்தால் 8 லட்சம் பேருக்கு மேல் என்பது நிச்சயமாகின்றது.

மண்ணெண்ணெய்யைப் பொறுத்த வரையில் பத்திரிகைக்கு தகவல் கொடுத்தவர் நினைக்கின்றார்போலும் வீட்டுக்கு தனியொரு குப்பிலாம்பு போதும் என்று அப்படியல்ல விவசாயத்திற்கு அலுவலகத்திற்கு தூர இடங்களில் இருந்து வருபவர்களின் வாகனங்களுக்கு டாக்டர்களுக்கு மண்ணெண்ணெய் கொடுக்க வேண்டியுள்ளது அல்லது அவர்களின் சேவையை நாம் பெற முடியாது. நாம் தனியே போத்தல் லாம்புக்கு எண்ணை கொடுக்க வேண்டும் என்று கணக்கெடுத்தால் அது ஒரு தவறான நோக்க முடையது என்பதையே நான் சொல்ல வேண்டியுள்ளது. ஒரு வீட்டுக்கு ஒரு லீட்டர் என்று கொடுக்க எமக்கு 1100 பரல் வேண்டும் ஏனெனில் 2 லட்சம் வீடுகள் உள்ளன. விவசாயிகள், மாணவர்களுக்கு மென மண்ணெண்ணெய் தேவையாகவுள்ளது. கல்வித் தரம் குறைந்து போக விரக்தியும் கூடிச் செல்லும்.

கேள்வி: யாழ்தேவி இராணுவ நடவடிக்கையின் போது எதிர் நோக்கப்பட்ட பிரச்சினைகள் என்ன?

பதில்: இராணுவ நடவடிக்கை ஆரம்பித்ததும் பளைப் பகுதியிலிருந்து சாவகச்சேரி வரை பொம்பர்களும், ஹெலிகளும் தாக்குதல் நடத்தியதால் மக்கள் அங்கு மிங்கும் இடம்பெயர்ந்தனர். அவர்களுக்கு அந் நேரத்தில் உணவு வழங்குவதில் எமக்கு கஷ்டங்கள் இருந்தன. ஏனெனில் ஒரு வாகனங்களும் அவ் வழியால் செல்லக்கூடிய சூழ் நிலை இல்லை. இரவில் சில வாகனங்களில் வெளிச்சத்தை அணைத்துவிட்டு உணவுகளை அனுப்பக்கூடியதாக இருந்தது அந்த சமயம் காயப்பட்டவர்களுக்கும் காலம் தாழ்த்தியே சிகிச்சைக்கு ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வரக்கூடியதாக இருந்தது.

கேள்வி: இத்தாக்குதலில் பொதுமக்கள் தரப்பில் அதிக சேதம் ஏற்பட்டதாக கூறப்படுகின்றதே?

பதில்: எனக்கு கிடைத்த தகவலின்படி சுமார் 47 மக்கள் இறந்துள்ளனர். 67 பேர் காயமடைந்துள்ளனர். ஆனால் சாவகச்சேரியில் அதிகமானோர் இறந்தனர். பங்கர் ஒன்றினுள் 23பேர் இறந்துள்ளனர். இதைவிட நந்தாவில் அம்மன் கோவில் பகுதியில் வீழ்ந்த குண்டில் 4 பேர் இறந்தனர். ஷெல் நாலாபக்கமும் அடிக்கத் தொடங்கிவிட்டனர். மண்டைதீவு, அச்சுவேலி பக்கமாகவிருந்து வந்த ஷெல்லினால் பலர் காயமடைந்தனர்.

கேள்வி: குடாநாட்டில் மருந்து தட்டுப்பாடு, போக்குவரத்து வசதியில்லை இப்படியான நிலையில் காயப்பட்டவர்களுக்கு எப்படி சிகிச்சை அளித்தீர்கள்.

பதில்: கஷ்டமான நிலை தான். எங்கள் டாக்டர்கள் தம்மாலியன்றளவு உதவினர். 24 மணிநேரமும் பணியில் நின்று பலரைக் காப்பாற்றினார்கள். முதல் மூன்று நாளில் சுமார் 200 பேர் சிகிச்சை பெறவேண்டி வந்தது.

கேள்வி: உணவுக் கப்பல்கள் தாமதப்படுத்தப்படுவதாக இங்கு செய்திகள் வந்தன. அப்படியானால் உணவுக்கும் தட்டுப்பாடு உள்ளதா?

பதில்: அந்நேரத்தில் கே.கே. எஸ்சில் கப்பலை தடுத்து வைத்திருந்தனர். ஆனால் எம்மிடம் கையிருப்பு இருந்ததால் அவற்றை மக்களுக்கு விநியோகிக்கக்கூடியதாக இருந்தது.

கேள்வி: இப்போது நிலைமை எப்படி?

பதில்: போக்குவரத்து பிரச்சினை இருக்கிறது மழை காலம் தொடங்கியதும் மக்களுக்கு கஷ்டம் இருந்தும் கிளாலி பாதையை மீண்டும் மக்கள் பாவிக்கின்றனர். ஏனெனில் வேறு வழியில்லாததால் அதில் போக்குவரத்து செய்ய வேண்டியுள்ளது. கிளாலிப் பாதை ஆரம்பித்த முதல் நாள் சுமார் ஆறுபேர் மிதிவெடிகளினுள் அகப்பட்டு காயமடைந்தனர்.

ளான கன்னன்குடாவைச்சேர்ந்த காத்தமுத்து அரசரத்தினம்,, உன்னிச்சையைச்சேர்ந்த பாக்கியராசா மரியதாஸ் புல்லுமலையைச்சேர்ந்த அருமைராசா பிரசாத், களுவாஞ்சிக்குடியைச் சேர்ந்த செல்லப்பா சௌக்கியதாஸ் ஆகிய நான்கு பொதுமக்களை கைது செய்து உன்னிச்சை முகாம் கொண்டு சென்றனர்

### இராணுவம் பின்

கதை'' என்ற தலைப்பில் ஒப்பரேஷன் யாழ்தேவி நடவடிக்கையில இராணுவ தரப்பில் இந் நடவடிக்கை குறித்து திட்டமிடப்பட்ட களத்தில் ஏற்பட்ட நிகழ்வுகள், படையினர் இழந்த இராணுவ தளபாடங்கள் என்பவை குறித்து விபரமான விளக்கத்துடன் செய்தி கட்டுரை எழுதியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

டல் விடுக்கப்படுகிறது என்றும் அப்பத்திரிகையின் ஆசிரிய தலையங்கம் எழுதப்பட்டுள்ளது.

லூரி, ... புங்குடுதீவு சண்முகானந்தா, கனகரத்தினம் ம.வி எதிர் மட்டுவில் ம.வி

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்
### 26.10.93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 11418

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

24 5172, 26 6842, 51-2509, 26-1585, 42 0488
42 9625, 24-1250, 26-4393.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

26 3177, 28 5484, 27 4162, 27-1939, 22-6468
41 9211, 42 3419, 40-0774, 26 7663, 28-4672
27-9404, 26-5734, 26-6062, 26-6526, 26-6461
27-5725,

### சாவகச்சேரியில்
## இந்திய இராணுவத்தின் ஆக்கிரமிப்புத் தினம்
## 27 - 10 - 1990

இத் தினத்தில் உயிர் இழந்த பொது மக்களுக்கும் வர்த்தகர்களுக்கும் சார்பாக அஞ்சலி செலுத்தி இரங்கல் உரைகள்

27-10-1993 புதன்கிழமை பி. ப. 4.00 மணிக்கு சங்கக்காரியாலயத்தில் நிகழும்.

அதில் யாவரும் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்

தலைவர் கைத்தொழில் வர்த்தக சங்கம்
சாவகச்சேரி.

(6398)

## மரண அறிவித்தல்
## தம்பையா செல்லத்துரை
(M. T. S. கோடா, சுருட்டு புகையிலை வியாபாரி)

சுதுமலை வடக்கைப் பிறப்பிடமாக கொண்ட மு.த. செல்லத்துரை 26-10 93 (செவ்வாய்க்கிழமை) நேற்று காலமானார். இவர் சின்னத்தங்கச்சியின் அன்புக் கணவரும், சின்னத்துரை இராசம்மாவின் அன்புச் சகோதரரும் கனகராஜா பாலகிருஷ்ணன் (குஞ்சு), தருமகுலசிங்கம் (சிறி), லீலாவதி, பாலாம்பிகை ஆகியோரின் அன்புத் தந்தையும், அருமைத்துரை (ஓய்வுபெற்ற A. M. C உத்தியோகத்தர்), சிங்கராசா (ஓய்வுபெற்ற வன அதிகாரி), இராசேஸ்வரி, இரத்தினேஸ்வரி, மகேஸ்வரி, ஆகியோரின் மாமனாரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 27-10-93 (இன்று) காலை 9 மணியளவில் அவரது இல்லத்தில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று தாவடி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

[6399]

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1993 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 27ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.